சைவப்பெரியார்

# சு. சிவபாதசுந்தரம் பிரபந்தத்திரட்டு

வெளியீடு — 2

சைவப்பெரியார்
நூற்றாண்டு
விழாச்சபை.

உ

சைவப்பெரியார்

# சு. சிவபாதசுந்தரம் பிரபந்தத்திரட்டு

தொகுத்தவர்

பண்டிதை ச. அமிர்தாம்பிகை
அவர்கள்

வெளியீடு — 2

சைவப்பெரியார் நூற்றாண்டு விழாச்சபை

முதற் பதிப்பு: ஆகஸ்ட் 1978

SAIVAPERIYAR S. SIVAPATHASUNDARAM
PIRAPANTHATHIRADDU

First Edition: August 1978

*Author*:
**Pandithai S. Amirthambikai**
Kokuvil

*Publishers*:
**Saiva Periyar Centenary Society**
Velliampati
Alaveddy

*Printers*:
Sri Sanmuganatha Press
K. K. S. Road
Jaffna

# முன்னுரை

மாணவர் மனக்கண்ணின் நின்றும் அகலாதவரும், அவர்களை தோன்றாத் துணையாய் நின்று இன்றும் நடத்துபவருமாகிய காலஞ்சென்ற சைவப்பெரியாரின் நூற்றாண்டு விழாவை அவருடைய மாணவர்களும் சைவாபிமானிகளும் மெய்யன்போடும் சிரத்தையோடும் கொண்டாடும் இக்காலத்திலே அவரெழுதிய நூல்களி லுள்ள சிறந்த பகுதிகளைத் தொகுத்து ஒரு "பிரபந்தத் திரட்டு" ஆக்குவது அடியேனுக்கு இடப்பட்ட பணி. என் தகப்பனார் காலஞ்சென்ற சட்டத்தரணி வே. மாணிக்க வாசகர் தனது தாய் மாமனாகிய சைவப்பெரியாரை அடி யாளுக்கு அறிமுகஞ்செய்து வைக்க, அவரும் "சைவத் தொண்டு" செய்வதற்காக அடியாளையும் பட்டதாரி யாக்கினார். அவருடைய நூல்களெல்லாவற்றையும் படிக்க வசதியில்லாதவர்களுக்கு இப்பிரபந்தம் பெருந்துணையாக விருக்கும். எடுத்துக் கொண்ட விடயத்தைத் திறம்பட ஆளுவதில் வல்லவர். சிறியோருக்கும் பெரியோருக்கும் விளங்கக்கூடிய முறையில் தரப்படுத்தியெழுதுவதில் வல்ல வர். 'கற்றதொழுகு' என்ற மொழிக்கிணங்க ஒவ்வொரு பாடத்திலும் படிப்போரை சைவவொழுக்கத்தை பின்பற் றத்தூண்டுபவர். உதாரணமாக மாமிசபோசனத்தைச் சைவர்கள் கைவிட வேண்டுமென்னும் கருத்தை எத்த னையோ கோணங்களில் நின்றும் ஆராய்ந்து இடித் துரைக்கிறார். சமுதாயத்தில் உள்ள ஊழல்களை வெளிப் படுத்தி அஞ்சாது, கண்டிக்கிறார். சமயமென்பது ஒரு வாழ்க்கை நெறியேயன்றி வெறும் புத்தகப்படிப்பன்று என்பதை வற்புறுத்துகிறார்.

பண்டிதை ச. அமிர்தாம்பிகை
தொகுப்பாசிரியர்

உ



சு. சிவபாதசுந்தரம்

# திருவருட்பயன்

## சுந்தரனாரின் விளக்கக்குறிப்புகள்

### திருவருளின் மகிமை

வறுத்தல், அவித்தல், பொரித்தல் முதலிய பல வகைப் பாகத்தொழில்களை நெருப்பினது சூடு செய்வது போல, படைத்தல் காத்தல் முதலிய தொழில்களைச் சிவ பெருமானுடைய சத்தி செய்கின்றது. வெவ்வேறு தொழில்களைச் செய்யும்போது நெருப்பின் சூடு வேறு படுவதன்று. ஒரு பொருள் சூட்டை நெய்யோடு பெறும் போது பொரிக்கப்படுதலும், நீரோடு சேரும்போது அவிக்கப்படுதலும், சட்டியோடு நேரே சேரும்போது வறுக்கப்படுதலும் காண்கிறோம். இந்த வேறுபாடுகள் அந்தப் பொருள்கள் வெவ்வேறு பொருள்களோடு சேருவதனால் வருவன ஆயினும் சூடு ஒன்றேயாம். இதைப் போலவே ஆன்மாக்களுக்காகச் செய்யப்படுவன வாகிய படைத்தல் காத்தல் முதலிய தொழில்கள் அவை சேர்ந்து நிற்கும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய இவற் றின் வேறுபடுந்தன்மைகளினால் உண்டாகும் பேதங்க ளாம். அருட்சத்தியின் வேறுபாட்டினால் வருவனவல்ல. ஆகவே சிவபெருமான் ஒரு மாறுதலுமடையாமல் நிற் பது போலவே அவருடைய சத்தியும் ஆன்மாக்களை ஈடேற்றும் முயற்சியில் ஒரு மாறுதலும் அடையாமல் நிற்கின்றது.

கடவுளில் உலகம் ஒடுங்குவதும் பின்பு அவரிலிருந்து தோற்றுவதும் அவரில் மாறுதலை ஆக்குவனவென்று கடவுளை ஒருபை போலவும் உலகம் அந்தப் பைக்குள்

போடப்பட்டு வெளியே எடுக்கப்படும் பொருள் போல வும் இவர்கள் எண்ணுகிறார்கள். உலகம் மாயையி லிருந்து தோன்றுவது, மாயை ஒடுங்கும் போதும் விரி யும். அதற்காதாரமாவது சிவச்சித்தியாம் இதனை "தாரக மாம் அத்தனருள் நிற்றல்" என்னுஞ் சிவஞான போதத் திருவாக்கான் அறிக.

## கடவுளிலும் பெரியதொன்றில்லை

இந்தப் பூமி மிகப்பெரியது. சூரியன் பூமியிற் பதின்மூன்று இலட்சம் மடங்கு பெரியது. சூரியனிலும் பெரிய எண்ணில்லாத நட்சத்திரங்கள் ஆகாயத்தில் விளங்குகின்றன. இவை முதலானவை பூத அண்டங்களைச் சேர்ந்தவை. பூதத்துக்கு மேலான தத்துவங்களால் ஆக்கப்பட்டவைகள் இவைகளிலும் மிக அதிகமானவை. இவைகளெல்லாம் சேர்ந்தால் எவ்வளவு பெரியவைகளா கும். ஆயினும் இவையெல்லாம் ஒருங்கு சேர்ந்தும் சிவ பெருமானுக்கு முன்னே அணுவளவாகவும் நிற்கமாட்டா. மின்மினியின் ஒளி சூரியப்பிரகாசத்துக்கு முன்னே சூனியமாவது போல அளவிடப்படாத உலகங்களெல்லாம் சூனியம் என்று சொல்லத்தருவனவாக அவர் பெரியரா யுள்ளவர். "அண்டப்பகுதியி னுண்டைப் பிறக்கம், அளப்பருந் தன்மை வளப்பெருங்காட்சி, ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின், நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன, இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச் சிறியவாகப் பெரியோன்" என்று மாணிக்கவா சக சுவாமிகள் பாடியருளினர்.

நமது மனமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்களாலாய பொருள்களை மாத்திரம் அறியத் தக்கது. சிவஞானம் முப்பத்தாறு தத்துவங்களுக்கும்

அப்பாற்பட்டவர். ஆதலால் அவர் அறிதற்கரியவர். அவர் நுண்மையினால் ஒப்பில்லாதவர் என்பதை "நுண்ணுணர்வுணரா நுண்ணியோன்" எனவும், "அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்" எனவும், "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" எனவும் வரும் திருவாக்குகளாலும் அறிக.

இடைவிடாது தீமையையே செய்துவரும் உயிர்களுக்கும் இறுதியிலே தமது திருவடியாகிய ஞானந்தப் பெருவாழ்வைக் கொடுப்பவராதலால், சிவபிரானது பேரருள் ஒப்பில்லாததேயாம், இப்பேரருளுடைமை அநுப்த சக்தி எனப்படும்.

நம்மைப் பற்றியிருக்கும் ஆணவப்பிணி நீங்கிய பின்புதான் நாம் அவரை அடையலாம். அளவில்லாத காலம் நாம் முயற்சிசெய்தும் இன்றும் ஆணவப்பிணி நம்மைவிட்டு நீங்கவில்லை ஆதலால், "பேற்றினருமைக்கு மொப்பின்மையான்" என்றார். அவரை நாம் பெற வேண்டுமாயின், சிவத்தொண்டு, சிவபூசை, தவம், செபம், தியானம் முதலாக வேதாகமங்களிலே விதிக்கப்பட்டவைகளை முழு மனத்தோடு வழுவாது செய்தல் வேண்டும்.

## கடவுள் அடியார்க்கெளியன்

சரீரத்தினது துணையைக்கொண்டு நாம் பொருட்களை அறிகிறோம்; இச்சரீரம் கடவுளாற் கொடுக்கப்பட்டது. ஆதலால் அவர் நமக்குத் தலைவராகிறார். அவருக்குச் சரீரம் இல்லாமையால் சரீரத்தைக் கொடுத்தற்கு அவருக்குத் தலைவருமில்லை. சரீரக் கருவிகளால் அறியுமறிவு இடையிலே தோன்று மறிவு. கண்ணாற் பொருள்களைக் காணும்போது அப்பொருளினறிவு அப்போது

உண்டாகிறது. இப்படியே ஆன்மாக்களின் அறிவெல்லாம் இடையிலுண்டாவன, கடவுள் இயற்கையறிவினராதலால் யாவற்றையும் என்றும் அறிபவர்.

கடவுள் எவ்விடத்தும் இருப்பவராயினும் தம்மை மெய்யன்போடு வழிபடுவாராற் காணப்பட்டும் மற்றையோராற் காணப்படாமலும் இருப்பர் என்பது கருத்து. இதை விளக்குதற்கு, "அன்பருள்ளங் கரந்து நில்லாக் கள்வனே" என்றும், "கனவிலும் தேவர்க்கரியாய் போற்றி" என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்லியருளினர். பசுநல்வினை செய்ததின் பயனாய்த் தேவராய்ப் பிறந்தவர்களும் அவரை அறியார் எனவே, தீவினை செய்வோர் அறியார் என்பது சொல்லாமலே விளங்கும். சிவபெருமானை அறிய வேண்டுமாயின் சிவநல்வினை செய்தல் வேண்டும். "அறிவாய்" என்றதனாற் சிவபெருமான் அருளும் மெய்ஞ்ஞானத்தினால் மாத்திரம் அவரை அறியலாம் என்பது பெறப்பட்டது. இந்த மெய்ஞ்ஞானம் சிவநல்வினை செய்வதால் வருவது. இதை, "புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங் கீழ்நோக்கும் புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே நண்ணிய ஞானத்தினால்........ முத்திபெறும்" என்னுஞ் செய்யுளிலுங் காண்க.

## சாதனைகள் ஏன்?

சிவஞானத்தைப் பெறுதற்குமுன் நான் கடவுளையறிய இயலாதாயின் அவரைத் தியானித்தலும் வணங்குதலும் எவ்வாறாகும்? தியான வணக்கங்களின்றி முத்தி நிலை கைகூடாதே! கடவுள் தம்மை வழிபடுதற்கு அநேக மூர்த்தங்களை ஆகமங்களிலே விதித்தருளினர். அவைகள் சிவாலயங்களிலுள்ள திருவுருவங்கள். அவை

களைக் கண்ணால் தரிசித்துக் கடவுளாக நினைத்து வணங்கினால் அவரை நேரே வணங்கும் பலனுண்டாகும். அந்தத் திருவுருவங்களைத் தியானித்தல் அவரைத் தியானித்தலாம். கோயிலிற் செய்யப்படுந் தொண்டுகள் அவருக்கு நேரே செய்யப்படுந் தொண்டுகளாம். இவைகளோடு சத்தி ரூபமாகிய மந்திரங்களையுச்சரித்தலும், தேவார திருவாசக முதலிய அருட்பாக்களைப் பாடுதலும் அவரைச் சமீபிக்கச் செய்யும் வழிகள். கோயிலுக்குப்போக இயலாத காலங்களிலே, அங்கே இருக்குந் திருவுருவங்களை மனத்திலே பதித்து வழிபடலாம். யோகநிலையையடைந்தவர்கள் கோயில் வழிபாட்டோடு யோக வழிபாடுஞ் செய்வர். கோயில் வழிபாட்டைப் பழிப்போர் சிலர், சிற்சில வடிவங்களாகக் கடவுளை நினைத்து வழிபடுகிறதாகக் கூறுவர். அவர் நினைக்கும் உருவங்களும் கடவுளுடைய உருவங்களல்லவே. அவைகளிலே சிவபெருமானுடைய திருக்குணங்கள் அமையப் பெருமையாலும், கோயிலிலுள்ள திருவுருவங்களில் அவைகள் அமைந்திருத்தலாலும், அவர்களது மனம் போனபடியே எண்ணுமுருவங்கள் பெரும்பயனற்றவைகள். வேறு சிலர் அவருடைய குணங்களைத் தியானிக்கிறார்களாம். குணத்தைத் தியானித்தல் அவரைத் தியானித்தலன்று. யோகக் காட்சியும் பரமசிவத்தைக் காண்பதன்று. ஆதலாற் கடவுளை நேரே யறியுஞ் சுத்தஞானி தவிர்ந்த மற்றையெல்லோரும் பிரதிமை வாயிலாகவே கடவுளை வணங்குகின்றனர். பிரதிமைகளும் கோயிலிலுள்ள பிரதிமைகள், சிவபெருமானாற் கற்பிக்கப்பட்டமையாலும், அன்பர்களுக்கு அப்படியான உருவங்களில் தோற்றி அருள் செய்ததினாலும், சிவசத்தியாகிய மந்திர நியாசத்தினாலே அவருடைய திருவருள் தயிரில் நெய் போலத் தோன்றி நிற்றலாலும், எல்லாப் பிரதிமைகளுள்ளும் சிறந்தவைகளாம்.

## ஆணவம் உண்டா?

இருள் மிகுந்த இரவிலே, வழியில் நிற்கும் மரம் மரமாகத் தோன்றாது; அவ்வழிச் செல்வோர் அதைக் காணாது அதிலே தலையைத் தாக்குவர். அதிலே கிணறிருந்தால், அது தோன்றாமையாற் கிணற்றுள் வீழ்வர்; பாம்பு கிடந்தால் அது தோன்றாமையால், அதிலே மிதித்துக் கடிக்கப்படுவர். இவ்வாறு, பொருள்களுடைய தன்மையை மறைப்பது இருளுருவமான பொருள். பதி பசு பாசங்களின் தன்மை மறைக்கப்படுகின்றபடியால், அவற்றை மறைப்பதாகிய இருள்போன்ற பொருள் ஒன்று இருத்தல் வேண்டும் என்பது அநுமானம். இப்பொருள் ஆணவம் எனப்படும். இது பிறவித்துன்பத்தை மறைத்து அதை இன்பமாகக் காட்டி, ஆன்மாவை அத்துன்பத்துக்குக் காரணமாகிய வினையிலே செலுத்துகின்றது; வீட்டின் பேரின்பத்தை மறைத்துத் துன்பமாகக் காட்டி, அந்த வழியில் ஆன்மாவைச் செல்லவிடாது தடுக்கின்றது; கடவுளுடைய திருவருளின் பெருமையை மறைத்து ஆன்மாவுக்கு அகந்தை மமதைகளை உண்டாக்கி மயக்குகின்றது. அகந்தை மமதைகள் "யான்" "எனது" எனப்படும். இவைகள் மயக்கங்கள் என்பதை "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க், குயர்ந்த உலகம் புகும்" என்னுந் திருவாக்கானுந் தெளிக. மனித சாதியாரிலே தீயகுணந் தோன்றிய வழியை அறிதற்கு மேலைத்தேச பண்டிதர் அநேகர் பெரும் முயற்சி செய்கின்றார்கள். இந்த ஆராய்வு மலடி மைந்தனைத் தேடுதல்போல் வீண் செயலாம். தீயகுணங்களுக்குக் காரணமாயுள்ள ஆணவம் இடையிலே தோன்றியதன்று. அது ஆன்மாவோடு அநாதியாய் உள்ளதென்பதே அவர்கள் அறிய வேண்டியது. ஆணவம்

ஆன்மாவைச் சேர்ந்ததன்று. இந்த உண்மை இச்செய்யுளில் வற்புறுத்தப்பட்டது. அறிவுத்தொழிலில்லாததாகிய மாயையையும் ஆணவம் பாதிக்கும் என்று சிலர் கூறுவர். இது முயற்கொம்பைச் சாத்தன் ஒடித்தான் என்பது போலாம்.

## வேண்டும் பொருள் இறைவனது திருவருளே

கோடிக்கணக்கான திரவியத்தையுடைய ஒருவன் தண்ணீர் அகப்படாத தனிவழியிலே போகும்போது, அவனுக்குத் தாங்குதற்கரிய தாகம் வருமாயின், அவனுக்கு வேண்டும் பொருள் தண்ணீரே. அப்போது, ஒருவன் தண்ணீர் கொண்டு வருவானாயின் அதைப் பெற்றுக் கொள்ளுதற்கு அவன் தன்னுடைய கோடி திரவியத்தையுந் தன்னுடைய சுயாதினத்தையும் அவனுக்குக் கொடுக்க விரும்புவான். ஆதலால், அச்சமயத்தில் "வேண்டும் பொரு"ளாகிய தண்ணீரிலும் பார்க்க மேலான பொருள் அவனுக்கு உலகத்திலில்லை. தாங்குதற்கரிய வியாதியால் வருந்தும் ஒருவனுக்கு அவ்வேதனையை நீக்கக்கூடிய மருந்து அச்சமயத்திலே "வேண்டும் பொரு"ளாகும். அதைப் பெற்றுக் கொள்ளுதற்குத் தனக்குள்ள எல்லாவற்றையுங் கேட்டாலும் கொடுப்பான். உலக வாழ்க்கைக்கு "வேண்டும் பொருள்" உலகப் பொருள்களுக்குள் ஒப்பு உயர்வு இல்லாதிருத்தல் போல, முத்தியின்பத்துக்கு இன்றியமையாத திருவருளானது ஒப்பு உயர்வு இல்லாத பொருளாகின்றது. தண்ணீர் கிடையாத இடத்திலே தாகத்தினால் சுழன்று வருந்துகிற ஒருவன் அதைப் பெற்றுக் கொள்ளுதற்குத் தனக்குரிய பொருள்கள் எல்லாவற்றையுங் கொடுக்கவும் தன்னாலியன்ற முயற்சிகளெல்லாவற்றையும் செய்யவும் உண்டா

கும் விருப்பத்திலும் பார்க்க அதிகமான விருப்பத்தோடு, ஆன்ம ஈடேற்றத்திற்கு இன்றியமையாததாகிய திருவருளைப் பெறுதற்கு, ஒருவன் தன்னுடைய பொருட்செல்வம் கல்விச்செல்வம் சிரத்தையாகிய இவற்றை முற்றாக உபயோகித்துத் தன்னுடைய வாக்காலும் காயத்தாலும் மனத்தாலும் செய்யத்தக்க முயற்சிகளெல்லாம் செய்ய வேண்டும் என்பதாம். "வைத்தபொருளுடலாவி மூன்றும் நின்கைவசமே யான் கொடுக்க வாங்கிக்கொண்டு சித்தமிசைப் புகுந்தது" என்று தாயுமான சுவாமியும், "பரமோதிய கல்வியு மெய்யறிவுந், தாமேபெற வேலவர் தந்ததனுற், பூமேன்மயல் போயறமெய்ப் புணர்வீர், நாமேனடவீர் நடவீரினியே" என்று அருணகிரிநாதரும் பாடியதைக் காண்க. லௌகிகர்கள் இவ்வளவு செய்ய வியலாதாதலால், திருவருளைப்பெறும் முயற்சிகளாகிய தேவார திருவாசக பாராயணம், திருத்தொண்டுகள், கடவுள் வழிபாடு முதலியவைகள் செய்யக்கூடிய சமயங்களிலே, விஷய இன்பங்களை இழக்கினும் இவைகளைப் பொருட்படுத்தாது, ஆன்ம ஈடேற்றத்துக்கு வேண்டிய அம்முயற்சிகளையே செய்யவேண்டும். கல்வியைக் கொண்டு ஞான சாஸ்திரங் கற்கவும் போதிக்கவும் சமயங் கிடைத்திருக்கும்போது அந்தக் கல்வியை லௌகிக விஷயத்திலே உபயோகிக்கலாகாது. செல்வத்தையும் அவசியமான நல்வழிகளில் உபயோகித்தல் தக்கதாம்.

## அருளை அறியும் வழி எது?

பூனை பாற்குடத்தினின்றுந் துள்ளிப் பாயும்போது, உறியினின்றும் பாற்குடம் விழுந்துடையப் பால் பூனைக்குப் பயன்படாமற் போகும். அதுபோல விளங்குதற்கரிய ஞானநூலைக் கற்கும்போது பிறவிஷயங்களில் மன

யைப் போக்குபவர் அதன் பொருளை மாறுபாடாக உணர்ந்து தடுமாறி வருந்துவர். கரப்பு ஒரு சிறு பிராணி. பூனை அதை உண்ணுதற்காகப் பாலை விட்டுப் போதல் பெரும்பேதமை. அதுபோல அற்பமான உலக இன்பங்களை நாடி ஞான நாலுபதேசத்தை அவதானியாமலிருத்தல் புல்லறிவாண்மையாம். ஞான நூல்களாவன வேதசிவாகமங்களும் அவற்றின் சாரமாகிய சிவஞானசித்தியார் முதலிய சைவ சித்தாந்த சாத்திரங்களும், சிவபெருமானுடைய திருவருள் பதிந்த தேவாரம், திருவாசகம் முதலிய மெய்ஞ்ஞானிகள் வாக்குகளுமாம். அருள் நூலைக் கேட்கும் முறைமை இச் செய்யுளில் விளக்கப்பட்டுள்ளது. அவற்றைக் கேட்டு அருளைப் பெறுதற்குப் பலவகையான சாதனைகள் அனுட்டிக்கப்படல் வேண்டும். சரீரசுகம் வேண்டியவர்கள் சரீராப்பியாசஞ் செய்வதும், விவேக விருத்தி வேண்டியவர்கள் கலாப்பியாசஞ் செய்வதும் எவ்வளவு ஆவசியகமோ, ஞான வளர்ச்சி வேண்டியவன் ஞானப்பியாசஞ் செய்வது அவ்வளவு ஆவசியகம்; கணிதத்திலுள்ள ஒரு பாடத்தை ஒருவன் நிதானமாக விளங்க வேண்டுமாயின், அதைச் சார்ந்த பல அப்பியாசங்களைச் செய்ய வேண்டும். நீந்தப் பழக வேண்டியவன் அனேக நாள்களாக அதிலே பயிலல் வேண்டும். அதுபோலக் கடவுளுடைய திருவருளைப் பெறவேண்டியவன் அதற்குரிய சாதனங்களைப் படிப்படியாக நெடுங்காலம் பயின்றுவரல் வேண்டும். சாதனை எவ்வளவு அதிகமாகச் செய்யப்படுகின்றதோ திருவருட் பேறும் அவ்வளவு அதிகமாகும். *அற்ப முயற்சியாற் பெரும் பேறு ஒருகாலும் வராது. ஆதலால் எந்தச் சமயங்களிலே சாதனைகள் குறைவோ அந்தச் சமயங்கள் மெய்ச் சமயங்களாகா

என்பது இனிது விளங்கும். இலௌகிகர்கள் அருள் பெறும் வழியையடைதற்கு, உண்மை நாயன்மார் சரித்திரங் கேட்டலும், சிவபத்தரோடு சேருதலும் முதற் படியாம். அவர்களோடு சேருதலாலும் அச் சரித்திரங்களைக் கேட்டலாலும் அவர்களுடைய செயலிற் பற்றுண்டாக, அவர்களைப்போல் நடக்க இவர்களும் விரும்புவர். அப்போது, தேவார திருவாசகங்களை ஓதலுங் கேட்டலும் அவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்து அதைக் கடவுளிலே செலுத்தும் பின்பு ஆலய வழிபாடு கடவுளிலே மனசைப் பதிக்கும். கடவுளிலே பற்றுடையவராயின் அவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்துத் திருவருளையடைவர்.

## ஞானகுரு செய்யுமுதவி

ஞானாசாரியனில்லாமற் கற்கும்போது ஞானநூல்களின் பொருள் மாறுபாடாகத் தோன்றும்; அல்லது தோன்றாமல் நிற்கும். ஆதலால் நமக்கு ஞானாசாரியன் வேண்டாமென்று சொல்லிக்கொண்டு நூல்களைக் கற்கும்போது, அவைகள் நமக்கு விளங்காமையினாலே அவன் இன்றியமையாதவனென்று நாமே உணரத்தக்கதாக நேரும். இதை உணர்த்துவதற்காக, "அவ்வத் தமக்கவனை வேண்ட" என்றார். ஞான நூலல்லாதவைகள் ஆசாரியனின்றியுங் கற்கப்படலாம். ஞான நூலுணர்ச்சி ஆசாரியனையின்றியமையாது. "ஆசானருளா லடிசேர் ஞானம் வந்திடும்; மற்றொன்றும் வாராதாகும்" என்றார் பிறரும்.

நயன தீட்சையிலே குரு சிஷ்யனுடைய சரீரம் முழுவதையும் பார்த்து அவனைச் சிவசொரூபமாகப் பாவிப்பன.

கிரியானது ஆதி பௌதிக நகுலம், ஆதி தைவிக நகுலம், ஆத்தியான்மிக நகுலம் என மூன்று வகைப்படும். அவற்றுள், உலகத்திற் காணப்படும் கீரி ஆதி பௌதிக நகுலம் அதற்கு அதிதெய்வமாய், மாந்திரிகன் அதுபோல பாவத்துத் தியானம் செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதிதைவிக நகுலம்; அந்த மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக நகுலம். இவற்றுள், ஆதி பௌதிக நகுலத்தைக் கொண்டு விஷத்தைத் தீர்த்தல் இயலாது. மாந்திரிகன் ஆதி தைவிகமாகிய நகுல மந்திரத்தை ஒவ்வொருநாளும் உச்சரித்து வந்த பழக்கத்தினாலே அந்த மந்திர ரூபமே தானாகப் பாவனை செய்து தன்னறிவை அதன் வசப்படுத்தி நிற்றல் நகுல பாவனையெனப்படும். அவன் அந்தப் பாவனையாய் நின்று அம் மந்திரக்கண் கொண்டு பார்க்க, அந்தப் பார்வையானது மந்திரத்திற் பதிந்த சத்தியினால் விஷத்தைத் தீர்க்கும்.

அதுபோல, ஆசாரியன் பஞ்சாட்சர செபப் பயிற்சியினாலும், தன்னைச் சிவமாகப் பாவித்துத் தன்னைச் சிவவசப்படுத்தியதனாலும் அவனுடைய பார்வையிலிருக்கும் மந்திர சத்தியினால் சிஷ்யனிலுள்ள விஷமாகிய ஆணவ வலி தடைப்படும். ஆதி பௌதிக நகுலத்தால் விஷங் கெடாமல், நகுல பாவனை செய்யும் மாந்திரிகனுடைய பார்வையினால் அது கெடுவதுபோல, என்றுங் கூட நிற்பதாகிய திருவருளால் மலமானது இறுதியில் நீக்கப்படாமல், அத்திருவருளைத் தானாகப் பாவித்து அத்திருவருளால் அதிட்டிக்கப்பட்ட குருவினது பார்வையினால் நீங்கும்.

## அடியார்களின் வினையைக் கடவுள் எடுத்துச் சுமப்பான்

திருவருளைச் சாராதாருடைய வினையையும் பயனையும் கடவுள் சுமக்கமாட்டார். ஒருவன் வறியவனாயிருக்கும்போது அவனுடைய நல்ல சுற்றத்தவர்கள் அவனுக்குள்ள கடன்களைக் கொடுத்து அவனைத் தாங்கி வருவதுண்டு. இப்படியே நல்ல சுற்றத்தவர்கள் அவனுடைய சுமையைப் பலவகையாகச் சுமக்கின்றார்கள். அதுபோல, கடவுள் தம்மைச் சார்ந்த மெய்யடியாருடைய ஆகாமிய வினையையும் பிராரத்தின் பயனாகிய இன்ப துன்பங்களையும் தாமே சுமக்கின்றார். தாமே சுமத்தலாவது அவர்களிலே சாராமற் றடுத்தல். "சிவனுமிவன் செய்தியெல்லாம் என் செய்தியென்னுஞ், செய்தனெனக் கிவனுக்குச் செய்ததென்றும்" என அருணந்திதேவர் திருவாய் மலர்ந்தருளினார். ஞானவான் தன்னைக் கடவுளிடங் கொடுத்தலினால் அவன் செயலில்லாதவனாக, அவனுடைய செயலெல்லாம் சிவன் செயலாகின்றன. ஆதலால் வாசனா மலமாகிய பழைய பழக்கத்தினால் தீவினையென்று சொல்லப்படும் வினைகளை அவன் செய்தானாயினும், அந்த வினைகள் அவனைச் சாரமாட்டா. கண்ணப்பநாயனார் திருக்காளத்தியிலே சிவ வசமாய் நின்று நைவேத்தியத்துக்காக உயிர்களைக் கொன்றார். இந்தக் கொலைத் தொழில் வாசனாமலத்தினாலே அவருடைய கருத்தின்றிக் காயத்தினாலே செய்யப்பட்டது. நோயினால் அறிவிழந்தவர்கள் பழைய பழக்கத்தின்படி பலவகையாகப் பேசிப் பல தொழில்களையுஞ் செய்வர். இவைகள் காயத்தின் செயல்களன்றி அவர்களுடைய செயலன்று. கண்ணப்பநாயனார் மிருகங்களைக் கொன்றதும் இச் செயல்களை யொக்கும். அவர் சுவாமிக்கு இறைச்சியைப்

படைத்தமையால், சிலர் தாமும் கடவுளுக்கு இறைச்சியைப் படைக்கலாம் என்று பிதற்றுவர். கண்ணப்பநாயனர் இறைச்சியைப் படைத்ததுமன்றித் தமது வாயிற் கொண்டுபோன நீரால் அபிஷேகஞ் செய்தனர்; செருப்புக் காலைச் சிவலிங்கத்தில் வைத்தனர். இவர்களும் வாயிற் கொண்டுபோன நீரால் அபிஷேகஞ் செய்து, திருமேனியிற் செருப்புக்காலை வைக்காததேனோ? இந்த மூன்று செய்கைகளும் மெய்ஞ்ஞானிகளல்லாதார் செய்யின் மகா பாதகங்களாய் முடியும். ஆதலாற்றான் கண்ணப்பநாயனர் அவைகளைச் செய்தபொழுது அவை பாதகமாகாமற் சிவபுண்ணியமாயின என்று எடுத்துப் பாராட்டப்படுகின்றன.

"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன்அமுதம்
விருப்புற்று வேடனர் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ"

(திருவாசகம்)

மெய்ஞ்ஞானிகள் "பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே" என்பதற்குக் கண்ணப்பநாயனர் செயல்கள் இலக்கியமாய் நின்றன. மெய்ஞ்ஞானிகளல்லாதார் அச் செயல்களைச் செய்யின் அவை பெரும் பாதகமாய் முடியுமென்பது திண்ணம். அந்தக் கர்மம் அவரிலே சாராமல் கடவுள் அதைத் தடுத்தார். அவர் அவ்வளவு நாளும் ஊண் உறக்கமும் தம்மைப் பற்றிய சிந்தனையுஞ் சற்றேனுமில்லாமலிருந்ததே அவர் சிவ வசப்பட்டிருந்தாரென்பதற்குச் சாட்சி.

சிறுத்தொண்டநாயனர் சிவனடியாராகத் தோன்றி வந்தவருடைய கட்டளையைச் சிவபெருமானுடைய கட்டளையாகப் பாவித்துச் சிவ வசமாய் நின்று தம்முடைய குழந்தையைக் கொன்றார்.

ஆதலால் அந்த வினை அவரைச் சாரவில்லை. தம் முடைய உயிரினும் இனியதாகிய குழந்தையைக் கொன்ற போது அவர் சற்றேனுந் துக்கப்படாமல் மகிழ்ச்சியோ டிருந்தது அவர் சிவவசமாய் நின்றார் என்பதற்குச் சாட்சியாகும்.

திருநாவுக்கரசுநாயனார் நீற்றறையில் இடப்பட்ட போது நீற்றினால் வருந் துன்பம் அவரைச் சாராமற் சிவபெருமான் தடுத்தார். அவர் கைலாசத்துக்குப் போனபோது அவருடைய கால் கை தேய்ந்து சரீரம் கல்லினால் கிழிக்கப்பட்டதனால் உண்டான துன்பம் அவ ரைச் சாராமற் கடவுள் தடுத்தார். இவ்வாறு ஞானவான் களின் வினைகளும் வினைப்பயன்களும் அவர்களைச் சாரா மற் கடவுள் தடுக்கின்றார்.

## இறைவன் அடியார்க்குத் தாமே வந்தருளுவர்

ஒரு சிறு பொருளைத் தரும்படி நாம் ஒருவரைக் கேட்க, அவர் கைம்மாறு கருதாமல் அதைத் தருவா ராயின் நாம் அவருக்கு நன்றி பாராட்டுகிறோம். அப் படியாகவும், மன வாக்குகளுக்கெட்டாத பெரும் பொரு ளாகிய சிவானந்தத்தைச் சிவபெருமான் (நாம் கேளா மல் தாமாகவே) கைம்மாறின்றித் தரும்போது எங்களி லிருக்க வேண்டிய நன்றியறிவுக்கு எல்லையுண்டா? நன்றியறிவு சிறிதுமில்லாமல், அவர் தாமே தருபவர் என்பதை மதியாமல், நமது வல்லமையினால் 'நாமே பெறுவோமென்று நினைப்பது பெருந் துரோகம்' திரு வருள் தானாகச் சிவத்தைத் தரும் என்பதை, "தான் வந்து நாயேனைத் தாய் போற்றலையளித்திட்டு", "தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார்கழல்" என்னும் திருவாசகப் பாக்களிலும்,

சிவம் தன்னைக் கொடுத்தபோது மாணிக்கவாசகசுவாமிகள் தம்மை அடிமையாகக் கொடுத்து ஆனந்த பரவசப்பட்டதை, "தந்ததுன் றன்னைக் கொண்ட தென்றன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர், அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்ற தொன்றென்பால், சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே, எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய் யானிதற் கிலனோர் கைம்மாறே" என்பதிலுங் காண்க.

**சமயாசாரங்கள் :**

உறங்குபவன் கைப்பொருளை விரும்பி விடாதது போல, சமயாசாரங்களை ஞானிகள் வேண்டாமென்று சிந்தித்து விடார்கள். சிலர் தாம் ஞானிகளென்றுந் தமக்குச் சமயாசாரங்கள் தேவையில்லையென்றுஞ் சொல்லுகிறார்கள். இவர்கள் ஞானிகளல்லர். ஆணவ முனைப்பினால் இவ்வாறு கூறுபவர் ஆதலால் இவர்கள் சரியை கிரியை யோகங்களையும் அநுஷ்டித்தற்குத் தகுதியில்லாத பிரவிர்த்தி மார்க்கத்தாரென அறிக. உறங்குபவனது கையிலுள்ள பொருள் சில காலம் விழாமலிருப்பது போல, ஞானிகள் முன் அநுஷ்டித்த சமயாசாரங்கள் வழுவப்பெறாமல் அவற்றை அநுஷ்டிப்பதுமுண்டு. உறங்குபவனது கைப்பொருள் பற்றின்றி இருப்பது போல, இவர்களது அநுஷ்டானம் பற்றின்றிச் செய்யப்படும்.

## ஐந்தெழுத்து

**நமசிவாய :**

பெத்தநிலையிலுள்ளோர் பஞ்சாட்சர செபஞ் செயும் போது ஒவ்வோர் எழுத்தின் பொருளையும் உணர்ந்து

ஊனநடனத்துக்குக் காரணமாகிய மலத்தினால் உண்டா வன யாவுந் துன்பங்களென்பதையும், சிவத்தால் உண்டாவன யாவும் விலையான இன்பங்களென்பதையும் அறிந்து, அகந்தை மமதைகளையும், உலக இன்பங்களையும் மலமென அருவருத்துத் தள்ளிக் கொடிய விஷப்பாம்பென அவைகளால் விலகி, ஞான நடனஞ் செய்விக்குஞ் சிவத்தை அமிர்தமென நினைத்து அதில் ஆசைப்பட்டு, ஆணவத்தின் விஷத்தைத் தீர்க்கும் மருந்தென அதை விரைவிற் பெறுதற்கு மனத்தைப் பற்றிக்கொண்டு செபஞ் செய்தல் தக்கதாம். இந்தப் பயிற்சியினாலும், மந்திரத்தில் அமைந்த திருவருளாலும், இப்படிச் செபம் பண்ணுவோன் தன் முயற்சிகளைச் செய்யும்போதும், பிறவுயிர்களோடு சம்பந்தப்படும்போதும் மலச் சேட்டைகள் தொடங்குமாயின், அவைகளை மலமென்றும் விஷமென்றும் அருவருத்து விலக்கி அவைகளுக்கிடங்கொடாமல் தர்மவழியில் நிற்பான். பஞ்சாட்சரத்தைச் சிரத்தையோடு விதிப்படி செபிக்கிறவனுக்குத் தீய எண்ணங்கள் உண்டாகுமானால், பஞ்சாட்சரத்தின் நினைவு உடனே உண்டாகும். அந்த நினைவு அத்தீய எண்ணத்தை ஓட்டிவிடும். "கொல்வாரேனும் குணம்பல நன்மைகள், இல்லாரேனும் இயம்புவராயிடின், எல்லாத் தீங்கையும் நீங்குவரென்பரால், நல்லார்நாம நமச்சிவாயவே" என்று சம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளினர்.

தீய எண்ணங்கள் வந்து நிலைத்து முளைக்குமுன்னமே பஞ்சாட்சரத்தினால் அவைகளை ஒதுக்குதல் கூடும். அவைகள் முளைத்த பின்பு அவைகளை ஓட்டுதல் சில போது பிரயாசமாயிருக்கும்; இப்படியே பஞ்சாட்சர செபமானது ஆணவத்தின் வலியைக் கெடுத்து ஆன்மாவைக் கடவுளோடு சேர்த்தற்கு முக்கிய சாதனமாம்.

ஆணவமாகிய கொடிய கடலில் ஆன்மாக்கள் ஆழாமல் அவற்றைக் கரையேற்றத்தக்க தோணி பஞ்சாட்சரமென்பதை, "அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை, முனைவனே முதலந்தமில்லா வல்லற்கரை காட்டிய யாட்கொண்டாய் மூர்க்கனேற்கே" என்பதனாலறிக.

சைவசமயத்திலே விதிக்கப்பட்ட முத்திக்குரிய சாதனங்களாவன திருக்கோயில், திருநீறு, திருவைந்தெழுத்து, சிவனடியார் சரித்திரங்கள், சிவனடியார் சங்கம், திருவருட்பாக்கள், நீதி நூல்கள், ஞான நூல்கள் முதலியவைகளும், சரியையிற் சரியையாதி முப்பத்திரண்டு பாதங்களுமாம், புறச்சமயங்கள் பலவற்றில், இந்தச் சாதனங்கள், கோடியில் ஒரு பங்குதானும் இல்லாதிருக்கவும், அவைகளும் ஆன்மாவை ஈடேற்றத்தக்க வெவ்வேறு வழிகளென்று சொல்லுவது எத்துணைப் பேதைமை. புறச்சமயங்களை அநுசரித்தல் தீமையென்பதை விளக்க, "பரசமயங்கட் கெல்லாப் பாக்கியம் பண்ணுணாதே" என்று அருணந்தி தேவர் கூறியருளினர்.

சிலர் பஞ்சாட்சர செபத்தினாலும், ஆலய வழிபாட்டினாலும், விரதாநுஷ்டானங்களாலும் தாம் ஒரு பயனுமடையவில்லை என்று சொல்லுகிறார்கள். இவர்கள் இவைகளைச் செய்தபோது சிரத்தை இல்லாமையே இவ்வாறு சொல்லுதற்குக் காரணம்; இயல்பிலே சிரத்தையுள்ளவர்கள் இவைகளின் பயனை விரைவிற் பெறுவர். மற்றையோர் இவற்றின் கருத்தையும் நோக்கத்தையும் உள்ளபடி அறிவதனாற் பயன் அடைவர். சிலர் சிரத்தையுள்ளோராயினும் தம் சுபாவமான அளவுக்கு மேலே செய்வதினால் அலுத்து இவைகளை வெறுத்துப் பாவிகளாதலுமுண்டு. நெடுநேரம் மனஞ்ச ஒரு வழிப்படுத்த

மாட்டாதவர் பஞ்சாட்சர செபத்தை யட்டாகச் செய்ய வேண்டும். பசியை அதிகந் தாங்கமாட்டாதவர்கள் நெடும் பசி விதிக்கப்பட்ட விரதங்களை அநுட்டிக்கத் தொடங்கி, பொழுது போகாதாமே என்று வருந்துவதும், விரத காலம் சமீபிக்கும்போது அதற்கு அஞ்சுவதும் உண்டு. இது சுமக்கமாட்டாத பாரத்தைச் சுமப்பதால் வரும் பொல்லாங்கு. ஆதலால் இயல்பிலே சிரத்தையில்லாதோர் சமயாநுஷ்டானங்களின் இரகசியங்களையறிந்து சிரத்தையுறல் வேண்டும். எவர்களும் மிகுந்த பிரியத்தோடு செய்து முடிக்கத்தக்க அளவு செபதியான விரதாநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும். அவ்வளவு மாத்திரஞ் செய்வாராயின் சிரத்தையும் அன்பும் வளர்தலால் அவர்கள் திருவருளைப் பெற்று நற்கதியடைவார்கள். வெய்யிலில் அலைந்தவன் நிழலைச் சேரும்போது எவ்வளவு ஆசையோடு போகின்றானே அவ்வளவு ஆசையோடு உலக முயற்சிகளை விட்டுச் செபம் தியானம் முதலிய சமயாநுட்டானங்களைச் செய்ய வேண்டும். உலக விஷயங்களாகிய ஊன கடனத்திலே இவ்வளவு நேரமும் அலைந்த நமக்குக் கடவுளை வழிபட்டு ஆன்மாவை ஈடேற்றுவதற்கு நேரம் இடைத்து விட்டதே என்ற சந்தோஷத்தோடு அம்முயற்சிகளைத் தொடங்க வேண்டும். "ஆலயத்தானுமானெனத் தொழுமே" என்பதிலும், "நாள்ளேன் நினதடியாரொடல்லால் நரகம் புகினும்", என்பதிலும் "மேவினோம் அவனடியார் அடியாரோடு மேன்மேலுங் குடைந்தாடியாடுவோம்", என்பதிலும் காண்க. சிவலிங்கம் முதலிய திருமேனிகளிற் சரியாவான்களுக்குச் சிவபெருமான் மறைந்து நின்று அருள் செய்வர். மந்திரபியாசத்தால் வழிபடுங் கிரியாவான்களுக்கும் மந்திரங்களால் வழிபடும் யோகிகளுக்கும் அவ்வவ் மந்திரங்களால் அவரவர் விரும்பிய வடிவாய்த் திருமேனிகளில் அவ்வப்

போது தோன்றிநின்று அருள் செய்வர். அன்பு மாத்திரையாய் வழிபடும் ஞானிகளுக்கு அவ்வன்பே தானுய் அத்திருமேனிகளில் எப்போதும் வெளிப்பட்டு நின்று அருள் செய்வர். முத்தர்கள் வாசனுமலத்தின் தாக்கத்தை நீங்குதற்கு அடியார்களேயும் ஆலயங்களேயும் வழிபடுவாராயின், முழுவலியோடு நிற்கும் மலங்களின் ஓயாத வினையினின்றும் விலகிக்கொள்ள அடியார்களேயுஞ் சிவாலயத்தையும் நாங்கள் எவ்வளவு அதிகமாக நாடி வழிபடல் வேண்டும்.

## வேத சிவாகமங்கள்

வேதமும் சிவாகமமும் சிவபெருமானுலே அருளப்பட்டமையால், அவைகள் சைவ சமயத்தின் பிரமாண நூல்களாம். வேதம் சிவாகமமாகிய இருவகை நூல்களேயும் பிரமாண நூல்களாகக் கொள்ளாதவர்கள் சைவசமயத்தவர்களல்லர்.

இவைகள் சிவபெருமானுல் அருளப்பட்டவையென்பதற்குச் சிவஞானிகளாகிய மெய்யடியார்களுடைய திருவாக்குகள் சான்றுகளாகின்றன. "வேதமோடாகமம் மெய்யாம் இறைவநூல்" என்று திருமூலநாயனுரும், "வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்........ ஆதிபமலன் தருநூல் இரண்டும்" என்று அருணந்தி சிவமும், "மிக்க வேதமெய்ந்நூல் சொன்னவனே" என்றும், "மன்னுமாமலே மகேந்திர மதனிற், சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்" என்றும் மாணிக்கவாசக சுவாமிகளும் பாடி அருளினுர்கள்.

இவற்றுள், சிவாகமங்கள் சைவசமயத்தின் பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கையும் விளக்குவன. நாம் நாள்தோறும் செய்யும்

வழிபாடு முதலியவைகளும், கோயில்களிலே நடை பெறும் பிரதிட்டை, பூசை, திருவிழா முதலியவைகளும், அபரக்கிரியைகளும் ஆகமங்களையே ஆதாரமாகக் கொள்ளுவன. இவற்றுட் பிரதிட்டையாவது கல்லினாலேனும் லோகங்களினாலேனும் முறைப்படி செய்யப்பட்ட உருவங்களிலே கடவுளை எழுந்தருளச் செய்து, அவற்றுக்குத் தெய்வத்தன்மையாக்கும் கிரியையாம். ஆகவே, ஆலய வழிபாட்டுக்கு இன்றியமையாதது ஆகமமாம். அபரக்கிரியைகளாவன: ஒருவன் இறந்த பின்பு அவனுக்குச் செய்யப்படும் அந்தியேட்டி முதலியவைகள். ஞானதீட்சை செய்யும் சிவஞானிகள் ஆகமங்களின் ஞானகாண்டத்தைத் தமது சீடர்களுக்கு உபதேசிப்பார்கள். இப்படியே, பரஞ்சோதி முனிவர் மெய்கண்ட தேவருக்கு ஞான உபதேசம் செய்தார். மெய்கண்ட தேவர் தமக்கு உபதேசித்தருளிய சிவஞானபோதப் பொருளைத் தமிழிலே பாடியருளினர். குருந்தமர நீழலிலிருந்த பரமாசாரியர் மாணிக்கவாசகப் பெருமானுக்கு ஞானோபதேசம் செய்தருளினர். சிவாகமப்பிரதிகள் எப்போதாயினும் கிடையாமற் போனாலும், காலத்துக்குக்காலம் தோன்றும் சிவஞானிகளால் அவைகள் புதுப்பிக்கப்பட்டு இவ்வுலகத்திலே என்றும் நிலவும். அவற்றின் ஏனைய பதிகளுட் பெரும்பாலானவை பத்ததிகளிலுள்ளவை. ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறுகிய இருபத்தெட்டுமாம்

வேதங்கள் கடவுளை வழிபடும் முறைகளையும், தோத்திரங்களையும் ஞானத்தையும் கூறுவன. சிவாக்கினியிலே கடவுளை வழிபடும் முறைமை வேதங்களிலே அதிகமாகக் கூறப்படுவது. சாதாரணமான நெருப்பிலே சிவபெருமானெழுந்தருளும் கிரியை செய்யப்பட்டால், அது சிவாக்கினியாகும். சிவாகமங்களிலே சதாசிவர் என்றும்,

நடேசர் என்றும், தக்கிணமூர்த்தியென்றும், தியாகராசர் என்றும் பல பெயர்களாலே சிவபெருமான் வழிபடப் படுவதுபோல, வேதங்களிலே இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி முதலிய பல பெயர்களாலே சிவபெருமான் வழிபடப்படுகின்றனர். இவ் வுண்மையை வேதங்களுள் ஒன்றாகிய இருக்கு வேதத்திலே "இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, திவ்யன், சுபர்ணன், கருத்மான் முதலிய பல பெயர்களால் அறிவாளிகள் கடவுளைச் சொல்லுகிறார்கள், ஆயினும் கடவுள் ஒருவரே" என வரும் மந்திரத்தால் அறிக. கடவுளுடைய இந்தப் பெயர்கள் பிற்காலத்திலே ஆன்மாக்களாகிய சிறு தெய்வங்களுக்கு இடப்பட்டன; (இக்காலத்திலே மனிதர்களாகிய எங்களுக்குச் சிவபெருமானுடைய பெயர்கள் இடப்படுதல் போல்). இதை உணராதவர்கள் வேதங்கள் சிறு தெய்வங்களை வழிபடுவன என்று மயங்குவர்.

இனி, வேதங்களுக்கு உரைகள் செய்தவர்கள் பல் வேறு சமயத்தவர்கள். இவர்கள் தங்கள் தங்கள் சமயத்துக்குப் பொருந்தத்தக்கனவாக உரைகளைச் செய்தமையால், இவ்வுரைகளிலே பெரும் பிழைகள் மலிந்தன. உயிர்க்கொலையைப் பற்றிப் பேசாத இடங்களிலே உயிர்க்கொலை விதிக்கப்பட்டதாக இவர்கள் உரை செய்தார்கள். இவ்வுரைகளைக் கண்டு வேதங்களிலே கொலை விதிக்கப் பட்டுள்ளதென்று அநேகர் மயங்குகின்றனர். கொலையையும் புலாலுண்ணலையும் வேதங்கள் விலக்குகின்றன. உதாரணமாக,

"மாமிசத்தை விலக்கி மற்றைய பதார்த்தங்களைச் சுத்தி செய்து சமைத்து உண்பவர்களுக்கு நல்ல சித்திகள் உண்டாகும்" "உயிர்களொன்றையும் கொல்லாத

இல்வாழ்வானுக்கு மேம்பாட்டைக் கொடு" என்று இருக்கு வேதமும், "கடவுளே, எல்லாப் பிராணிகளிலும் நான் அன்பாய் இருக்கவும், அவைகள் என்னில் அன்பா யிருக்கவும் அருள் செய்க". என்று யசுர் வேதமும் கூறுகின்றன.

வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அவர்வம் ஆகிய நான்குமாம். இருக்கு வேதத்தை மாணிக்கவாசகப் பெருமான் திருப்பள்ளி யெழுச்சியிலே "இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" என்றும், மெய்கண்டதேவர் சிவஞானபோதத்திலே இரண்டாம் சூத்திரப் பகுதியிலே "இக்கிரமத்தென்னும் இருக்கு" என்றும் குறிப்பிட்டருளினார்கள்.

சம்ஸ்கிருதமானது சைவசமயம் வழங்கும் நாடாகிய பரதகண்டம் முழுவதுக்கும் பொதுமொழியாதலால், வேதசிவாகமங்கள் சம்ஸ்கிருதத்திலுள்ளவை.

வேதங்கள் ஐரோப்பா முதலிய மிலேச்ச கண்டங்களிலும் இப்போது உள்ளன. ஆகமங்களுட் பல சில நூற்றாண்டுகளின் முன் தென்னிந்தியாவிலே இருந்தவை யாயினும் இப்போது மறைந்து விட்டன. சில ஆகமங்கள் மாத்திரம் இப்போது தமிழ்நாட்டிலுள்ளன. தமிழ் நாட்டில் இப்போது காணப்படாத ஆகமங்களுட் பல காஷ்மீர் தேசத்திலே அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன.

## கந்தபுராணம்

இந்நூலாசிரியர் காஞ்சிபுரத்திலே குமரகோட்டத்து அருச்சகராயிருந்த காளத்தியப்ப சிவாசாரியாரது தவப் புதல்வர். இவர் இயல்பாகவே அன்பும் அருளும் நிறையப் பெற்றவர். தென்மொழியும் வடமொழியும் நன்கு

கற்றுத் தேவார திருவாசகங்களையும் வேதாகமங்களையும் ஓதியுணர்ந்தவர். இவர் ஆசாரிய அபிடேகம் பெற்றுக் குமரகோட்டத்திலே சுப்பிரமணியப் பெருமானைப் பூசை செய்து கொண்டுவந்தபோது, ஓர் இரவு கந்தபுராணமாகிய இந்நூலைச் செய்ய வேண்டுமென்ற கருத்துத் திருவருளால் அவர்க்கு உண்டாயிற்று. அதன்பின் ஒவ்வொரு நாளும் பூசை முடிந்தபின் நூறு நூறு பாட்டுப்பாடி அக்கவிகளைச் சுப்பிரமணியப்பெருமானது திருமுன்னிலையிலே வைத்து அவர் வீட்டுக்குச் செல்வது வழக்கமாயிருந்தது சில நாள்களிற் காலையில் எடுக்குங்காற் சில திருத்தங்கள் காணப்பட்டன. இங்ஙனம் முருகக் கடவுளினது திருவருள் பதிந்த நூலாயினும் அது முறைப்படி அரங்கேற்றப்பட்டது. தமிழ்நாடெங்குமுள்ள சிவனடியார்கள் இந்நூலை அன்புடன் ஓதியுங் கேட்டும் பேரானந்தமடைந்து வந்தனர். கச்சியப்ப சுவாமிகள் பின்னருஞ் சில காலமிருந்து குமாரக்கடவுளின் திருவடிகளையடைந்தனர்.

காவியமுறையாகப் பொருள்களைச் சிறப்பிக்குங்கால், ஒப்புகள் பெரும்பாலும் அருணெறிச் சார்புடையனவாக மிளிரும் முகில்கள் வானவில் காட்டி நந்திமலையில் மழைபெய்வதில் வில்லைத் தாங்கிய கண்ணப்பநாயனார் சிவலிங்கத்தில் நீர் சொரிந்ததை ஒக்குமெனப்பட்டது.

உண்மைகள் பெரும்பாலுஞ் செயலினால் விளங்கப் பட்டன. அறனல்லவற்றை நேரே விலக்குதல் ஆசிரியர்க்கு உடன்பாடன்று. எதிர்மறை விதிகள் பெரும் பயன் தருவன அல்ல. குழந்தைகள் கிணற்றடிக்குப் போகலாகாதென்பது ஓர் எதிர்மறைவிதி. இவ்விதியினாற் குழந்தைகள் கிணற்றடிக்குப் போதல் தடைப்படாது. இது அங்குப் போகச் சாதாக்குழந்தைக்கும் போக

வழிகாட்டுவதாக முடிதலுமாகும். கிணற்றடிக்குப் போதலைத் தடுக்க வேண்டுமாயின், ஒரு குழந்தை கிணற்றடிக்குப் போய்த் தவறிக் கிணற்றில் வீழ்ந்திறந்தது என்று அக்குழந்தைக்குச் சொல்லுதல் பயனுடைத்தாம். ஆசிரியர் அறிவூட்டும் முறைமை இதுவே. சிவநிந்தனையால் வரும் தீமை தக்கனது யாகத்தாலும், மகளிரை விரும்பல் காசிபன் புலம்பலாலும் இந்திரன் வருந்தியதாலும், பெரியாரைப் பிழைத்தல் வில்வலன் வதாபிப்படலத்தாலும் விளக்கப்பட்டன. சைவசித்தாந்த வாய்மைகள் காசிபன் உபதேசத்திலும், சிவபிரானது அருட்செயற்றெளிவு ததீசி யுத்தரத்திலும், துறவற இல்லறச் சிறப்புக்கள் மார்க்கண்டேயப்படலத்திலும், பொருட்பெருமை மாயையுபதேசத்திலும் ஆசிரியர் காட்டியருளினர். உலகாயதம், மாயாவாதம், மீமாம்சம், வைணவம் ஆகிய சமயங்களின் இழிவை இந்திரபுரி, சுக்கிரனுபதேசம், ததீசியுத்தரம், திருக்குற்றாலம் ஆகிய படலங்களில் ஆசிரியர் பெரும்பாலுஞ் செயலினால் விளக்கியருளினார். வள்ளியம்மை திருமணப்படலத்தில் முத்தி நெறியை நன்கு காட்டியருளினார். புராண வரலாறும் கந்தபுராணக் கதைச் சுருக்கமும் பாயிரத்திற் கூறப்பட்டன. சுவாமிகளது தமிழ்நடை மிக எளிது. இலக்கண இலக்கிய அறிவு சிறிதுடையாரும் கற்று உய்வடைதலே சுவாமிகளது நோக்கம் போலும். சொற்களுஞ் சொற்றொடர்களுஞ் சால இனியன. பிற்காலத் தமிழ் நடைத்தலைவராகிய ஆறுமுகநாவலர் பெருமானது நடை கந்தபுராண நடையே. சுவாமிகள் கம்பர்போற் கதையைப் பெருப்பியாது விரைவாக வளர்த்துச் சொல்லுபவர். பொருட்செறிவுக்கும் உறுதிக்கும் இக்காவியம் ஒப்புயர்வற்றது. "வல்லவனுக்குப் புல்லுமாயுதம்" ஆதலுமன்றி, அப்புல்லினால் இரும்பு வாளைத்துணிக்கும் வன்மையும் சுவாமிகளுக்கு

உள்ளது. மேருமலைக்கும் விந்த மலைக்குமுள்ள ஏற்றத் தாழ்ச்சி ஆராய்வில் விந்த மலையை மேலாகக் காட்டியது. அரும்பெரும் நுண்மையையே வாதங்களில் உண்மையை நிறுத்துங்கால் பொய்மையைத் தகர்ப்பதோடு நில்லாது அதைத் துகளாக்கியும் விடுவர். சூரபன்மன் ஆயிரத் தெட்டண்டங்களை ஆளும் பெருமையைக் கூறியபோது, வீரவாகுதேவர் சொல்லியருளிய விடையிலுள்ள பொருட் செறிவும் வன்மையும் ஏனைய தமிழ்க் காவியங்களிலேனும் பிறமொழிகளில் உள்ளவற்றிலேனுங் காண்டலரிது. இந்நூலின்கணுள்ள சொற்றொடர்கள் அருளாகிய உயிரினையும், மந்திரமாகிய வலியினையுங் கொண்டு தெய்வவடிவினவாய்க் கற்போர்க்கு ஓர் அருந்துணையென நின்று அவரது தனிமையை நீக்கி அவருக்குப் பெருமகிழ்ச்சியையுங் கிளர்ச்சியையும் விளைக்கும். கற்போர் கதைச்சிறப்பினால் திருவருளை மறக்க நேருங்கால், உறங்குபவனை எழுப்புதல் போல் மெய்ப்பொடிப்ப மயிர்சிலிப்பக் கண்ணீர் சொரிவிக்கும் இனிய அடைமொழிகள் சார்ந்த குமாரக்கடவுளது திருநாமங்களை அடிக்கடி ஒலித்து நிற்கும்.

## காஞ்சிமாநகரப் பெருமை

காஞ்சிமாநகரத்திலே நடைபெறும் கூத்துகளெல்லாம் சிவபெருமானிடத்திலே கொண்ட பேரன்பாலுண்டாகும் கூத்துக்களாம். சிறந்த இசையோடு பாடப்படும் பாட்டுக்கள் யாவும் அவருடைய தோத்திரங்களே. அங்குள்ளார் கேட்கும் கதைகளெல்லாம் அவருடைய பெருமைகளை விளக்குங் கதைகளே. அங்குள்ள கூட்டங்களெல்லாஞ் சிவனடியார் கூட்டங்களேயாம். சிவயோகிகள் தமது சுவாசத்தை அடக்கி மூக்கு நுனியைப் பார்த்

துக் கொண்டு ஆசனத்திலிருந்து சிவபிரானது திருவடிகளை உள்ளத்திலிருத்தி மேலான சிவபுண்ணியமாகிய சிவயோகத்தைச் செய்யும் சாலைகள் அந்நகரத்திற் பலவுள.

இத்திருவிருத்தங்களினால் அக்காலத்திருந்தோருட் பெரும்பாலார் சரியா மார்க்கத்தையும் மற்றையோர் கிரியா யோகங்களையும் அநுட்டித்தனர் என்பது புலப்படும்.

நமது முன்னோர்கள் எங்ஙனம் அறிவு நூலாராய்ச்சியில் மிகச் சிறப்புற்று விளங்கினரோ அதனை ஒப்பவே உலகநூல் ஆராய்ச்சியிலும் மிகச் சிறந்து விளங்கினர். இதனை அறியாதார் சிலர் நமது சைவமுன்னோர் உலக நூலறிவும் அது பற்றிய வினைத்திறனும் பெற்றிலரென மயங்கித் தமிழ் நூல்களிற் காணப்படும் இயந்திரத்தேர்கள் படைக்கலங்கள் புலவராற் புனைந்துரைக்கப்பட்டனவென்று கூறிவந்தனர். இக்கருவிகளே இந்நாள்களிற் சில மேனாட்டாராலியற்றப்பட்டதைக் கண்டு தமது வெள்ளறிவின் இழிவை நோக்கித் தலைகுனிகின்றனர். ஆகாயத்தில் இயந்திரத் தேர்களினின்று பெரும்போர் செய்தல் இப்புராணத்திற் பலவிடங்களிலும் சொல்லப்படுகிறது.

## சூரன் முருகப்பெருமானை உணர்தல்

ஆசிரியர் புராண உண்மைகளை இவ்வாறு வேண்டிய இடங்களில் விளக்கிக் கற்போரது மயக்கத்தைத் தீர்க்கும் அருள் வழக்குடையார் போர் தொடங்கிய பின் குமாரக்கடவுள் சூரன்விட்ட படைகள் யாவற்றையுங் கவர்ந்து அவனை நிராயுதனாக்கியருளினார். அப்போது சூரன் குமாரக்கடவுளுடைய பெருமையை

ஒருவாறடபிந்து அவரை மனத்திலே புகழ்ந்தான். அப்போது குமாரக்கடவுள் அவனை நோக்கி, "இவ்வேலினால் ஒரு கணத்தில் உன்னைக் கொல்லுதல் சாலும். நீ படையின்றி நிற்பதால் அது செய்கிலேம். தேவர்களைச் சிறையினின்று நீக்குவையாயின் நீ உயிரோடு வாழ்வை." என்று திருவாய்மலர்ந்தருளினார். சூரன் தனக்கு அழியா வரமிருத்தலால் தான் சும்மா நிற்பினுங் குமாரக் கடவுள் தன்னைக் கொல்லுதல் நேராதென நினைந்து விடை கூறாது நின்றனன். பின்னர் அவன் வேறு சேனைகளோடும் படைகளோடும் வந்து போர் செய்வதே தக்கதென்றெண்ணி மறைவாகப் போர்க்களத்தினின்று நீங்கித் தன்னகரத்தை யடைந்தான்.

கந்தபுராணம்.

---

# திருவாசகம்

## திருவாசகப் பெருமை

திருவாசகமானது சிவஸ்துதியாயும் சிவஞான நிதியாயும் சிவஹஸ்த அருட்பொலிவினதாயும் இருத்தலால், இதனைப் பெரியோர் வேதம் என்று சொல்லுவர். இது எம்முடைய மொழியிலே தோன்றினமையால் வடமொழியிலுள்ள வேதத்திலும் சிறப்புடையதாயிற்று. இச்சிறப்பைச் சிவப்பிரகாச சுவாமிகள்,

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவி ராயின்
வேதமோ தின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே"

என்னுங் கவியில் விளக்கி அருளினர்.

இத்திருவாசகம் பத்திச்சுவை முதிர்ந்ததேனென்றும், சிவபிரானது திருவருள் நிறைந்திருத்தலால் "தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியது" என்றும் ஆன்றோர் பாடியருளினர். இது ஸ்துதி நூலென்பது பார்க்கவே புலப்படும். ஆயினும், பெரியோர்கள் இது ஞான நூலெனக் கண்டு இதிலுள்ள ஒவ்வொரு பதிகத்திலும் பேசப்படும் பொருளை அதனதன் தலைப்பிலே குறித்துக் காட்டினர். சுவையிலும் பயனிலும் பொருளிலும் ஒப்புயர்வற்ற இத்திருவாசகத்தைக் கல்லாத தமிழ்ச் சைவர்கள் மறுமை நலத்தை இழப்பதுமன்றி இம்மையில் அனுபவிக்கத் தக்க இன்பங்களும் பெரும்பகுதியை அனுபவியாமலும் அறியாமலும் நிர்ப்பாக்கியராகின்றனர்.

## அஞ்சே லென்றிங் கருள்வாய் போற்றி

இ-ள்: பயப்படாதே என்று எனக்கு இங்கே அருள்பவரே உம்மை வணங்குகின்றேன்.

ஒருவருக்குத் துன்பமில்லாத காலத்திலும் துன்பத்தை ஆக்குவது அச்சமாம். இது எல்லாப் பிராணிகளிலும் உள்ளது. ஆயினும் எங்களுடைய அச்சத்திற் பெரும்பாலானது அவசியமற்றது. பொருள் பண்டம் மோசம் போய்விடுமென்றேனும் பகைபிணிகளால் இடர் வருமென்றேனும் அஞ்சுவது பேதைமை. இவைகள் வருமென்றெண்ணுதற்குப் போதிய ஆதாரமின்றி அஞ்சுவது பேதைமையுட் பேதைமை. ஆயினும் அஞ்சி விலக வேண்டிய தொன்றுண்டு........ அது தீவினை. இங்கே மணிவாசகப் பெருமான் அஞ்சுவது வாசனுமலத்தால் வரத்தக்க தீவினையாம்.

அச்சமுள்ளவர்க்கு "அஞ்சாதே" என்று தக்கவர் ஒருவர் சொல்வதினுற் பெரிய ஆறுதல் உண்டாகும். சிவபிரானே அவ்வாறு சொல்லியருளுவதால் அது எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தருமல்லவா? சகல வடிவங்களிலுள்ள அபயம் என்னுந் திருக்கரம் "அஞ்சேல்" என்று சொல்லுகின்றது. ஆதலால் அதைக் காணுந்தோறும் எம்முடைய கவலைகளெல்லாந் தீர்ந்து சிவபெருமானுடைய திருவருளைப் பெறும் ஒரு கவலையே கவலையாய் நிற்கும்.

## ஆனந்தத் தேன்சொரியுங் குனிப்புடைய யானுக்கே சென்றுதாய் கோத்தும்பீ

இ-ள்: அரசவண்டே, நீ பூவியிலேயிருக்கின்ற தினையளவு தேனை யுண்ணப் போகாமல், நினைக்கும் தோறும் காணுந்தோறும் பேசும் தோறும் எந்த நேரத்திலும் எலும்பைத்தானும் உருக்கத்தக்க ஆனந்தமான தேன் மாரியைப் பொழிந்து கொண்டிருக்கும் கூத்தனிடம் ஊதி அந்தத் தேனெல்லாவற்றையும் பருகுவாயாக.

ஒரு உலக இன்பத்தைப் பெறுதற்காக நாங்கள் பெருமுயற்சி செய்கின்றோம். அந்த இன்பமோவென்றால் மிகவற்பமானது. ஐம்பொறிகளில் ஏதாயினுமொன்றைத் திருப்தி செய்யத்தக்கது; அநுபவித்து முடிய அதனுடைய நயம்கெட்டுப்போம். கடவுளை வழிபடுவதனால் வரும் இன்பமோவென்றால் எல்லையில்லாதது. அவரை நினைத் தாலுமின்பம் அவருடைய திருவுருவங்களைக் கண்டாலு மின்பம். அவருடைய திருநாமத்தைச் சொன்னாலுமின் பம், அதற்குப் பின்னுமின்பம், அவ்வின்பமும் ஒரு பொறிக்கு மாத்திரம் உரியதன்று. எல்லாப் பொறிகளை யும் மனத்தையும் உடம்பிலுள்ள எலும்பையும் உருக்கத் தக்கது. இந்த இருவகையான இன்பங்களுள் எதை நீ இச்சிக்க வேண்டுமென்று யோசித்துப்பார் என்பது கருத் தாம்.

திருவாசகம்.

---

# சைவ போதம்

## சமயத்தின் நோக்கம்

சமயத்தின் நோக்கம் ஆன்மா கடவுளைப் பற்றுத லாம் இதற்கு இன்றியமையாத சாதனம் ஆன்மா கடவு ளிற் பற்று வைத்தல். நாம் நல்லவரொருவரைப் பல முறையுங் கண்டு பேசிக் கூடித்திரிதலால், அவரிலே நமக் குப் பற்றுவளர்வது போல, கடவுளைக் காலையிலும் மாலை யிலும் வேறு நேரங்களிலும் அன்போடு தியானிப்பதா லும், கோயில் வழிபாட்டினாலும், திருத்தொண்டுகள்

செய்வதனாலும் கடவுளிலேயுள்ள பற்றை வளர்த்துக் கொள்ளுதல் சாலும். சிறுவயதிலே பழகிய பழக்கம் நிலைக்கத்தக்கதாதலால் இந்தப் பழக்கங்களைச் சிறுவருக்குப் பழக்குவது ஐங்குரவருக்குள்ள கடனாகும். இவைகள் தவிர சிவபிரானது திருவருளையும் சிவனடியாரது திடபத்தியையும், புண்ணியமான செயல்களையும் விளக்கும் கதைகளும் கடவுளிலே உள்ள பற்றை வளர்ப்பனவாம். இப்படியான கதைகளைப் படிப்பிக்க வேண்டிய உபாத்தியாயர்களுடைய வேலையைச் சுருக்குதற்காக இந்தப் புத்தகம் கதைரூபமாய் எழுதப்பட்டது.

இதிலுள்ள கதைகள் பெரும்பாலும் பழைமையானவை. வடமொழியிலுள்ள முதனூற் கதைகளுக்கும் தென்மொழியிலுள்ள வழிநூற் கதைகளுக்கும் இடைக்கிடை வேறுபாடுகளிருத்தலைக் கண்டு, இதிலுள்ள கதைகள் சில அவற்றினின்றும் வேறுபடுதலை ஆன்றோர் பொறுப்பர்.

சமயக் கல்விக்காலம் பெறும் பள்ளிக்கூடங்களிலே, தமிழ் நான்காம் வகுப்பிலும் இங்கிலிஷ் முதலாமாண்டு வகுப்பிலும் கற்கும் மாணாக்கர்கள் இப்புத்தகம் கற்கத்தக்கவர்கள். ஏனைய பள்ளிக்கூடங்களிலே இது நான்காம் வகுப்புப் புத்தகங்களில் ஒன்றாகப் போதிக்கப்படலாம். இது சிறுவர்களுக்கு மாத்திரமன்றிப் பொதுவாகக் கதைகளிற் பிரியமுள்ள ஏனையோருக்கும் பயன்படும்.

இப்படியான ஒரு புத்தகம் அறிவிற் சிறந்தவராய்ப் பத்திமானாயுள்ள ஒருவரால் எழுதப்பட்டாற் குறைகளில்லாததாய் இருக்கும். அப்படியான ஒருவரால் இனியாவது ஒன்று எழுதப்படுமென்று யாவரும் விரும்ப வேண்டும். அறிவாளர்கள் இதிலேயுள்ள குற்றங்களை எடுத்துக் காட்டுவார்களானால், இதற்குப் பெருந்துணை புரிபவராவர்.

## சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை

தென் இந்தியாவிலே மதுரை என்னும் ஒரு நகரமுண்டு. அதற்குக் கிட்ட ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டிலே ஒரு நாள் ஒரு பன்றி கொல்லப்பட்டது; அந்தப் பன்றிக்குப் பன்னிரண்டு குட்டிகள் இருந்தன; தாய்ப்பன்றி செத்துப் போனமையினாற் குட்டிகள் எவ்வளவு பாடுபடும்! அவைகளுக்குப் பசி தீர்ப்பவர் யார்? அவைகளுக்குத் துணையாவார் யார்! அவைகள் வெய்யிற் சூட்டினால் வருத்தப்பட்டன; பசியால் தவித்துத் தம் தாயைக் காணாமல் மனங்கலங்கின.

அவைகள் வருந்தியதைப் பரமபிதாவாகிய சிவபெருமான் கண்டார்; அவைகள் முற்பிறவிகளிலே அரிய புண்ணியங்கள் செய்திருந்தமையினாற் போலும் அவர் அவைகளுடைய தாய்ப்பன்றி போல உருவமெடுத்துக் கொண்டு அவைகளுக்குக் கிட்டப் போய்க் கிடந்தார். அவைகள் அதைக் கண்டதும் துன்பமெல்லாந் தீர்ந்து, சந்தோஷத்துடன் பால்குடித்துவிட்டுச் சிவபெருமானாகிய தாய்ப்பன்றிக்கு மேலே ஏறித்துள்ளி விளையாடின.

" ஆயினும் எல்லாப் பிராணிகளுக்குள்ளும் பன்றியே மிக அருவருக்கத்தக்க மிருகம். அப்படியான மிருகங்கள் சிவபெருமானுடைய திருமேனியிலே முட்டலாமா? என்று நீங்கள் கேட்கக்கூடும். அதற்கு மறுமொழி சிவபெருமான் சொல்லியருளியிருக்கின்றார்.

" நாம் எல்லா உயிர்களிலும் மிகுந்த அன்பாய் இருத்தலினாலேதான், வேதங்கள் ஆகமங்கள் எல்லாம் எம்மைச் சகல லோகையாபரன் என்று சொல்லுகின்றன.

ஒரு மனிதனுக்கு அவனுடைய உடம்பில் எல்லாப் பகுதிகளும் சரிதான். சுத்தமில்லாத இடங்களிலே மிதிக்கின்ற காலும் அவனுக்குத் தேவைதான்; மிக அருமையான கண்ணும் அவனுக்குத் தேவையே, காலிலே ஒரு வருத்தம் வந்தால், இது இழிவான கால்தானே என்றெண்ணி அந்த வருத்தத்தைத் தீர்க்காமல் விடுவானா? இல்லையே. அது போலவே எம்முடைய காரியமும். எல்லாவுலகங்களும் அவைகளிலே உள்ள உயிர்களும் எம்முடைய சரீரமாய் இருக்கின்றன. ஒருவன் தன்னுடைய சரீரத்தின் அவயவங்களிலே எவ்வளவு அவதானமாய் இருக்கிறானோ, அவ்வளவாக நாம் உலகத்திலேயுள்ள உயிர்கள் எல்லாவற்றிலும் அவதானமாயும் அன்பாயும் இருக்கிறோம். எல்லா உயிர்களும் எமக்குச் சரிதான். பன்றியும் பசுவும் எமக்கு ஒரே தன்மையானவைகளே; எல்லாம் எம்முடையவைகளே.

## சமயக்கல்வியின் நோக்கம்

சமயக்கல்வி பள்ளிக்கூடங்களிலே ஒரு வாரத்தில் இரண்டரைமணிப்போதுக்குக் குறையாமல் நடைபெறுகின்றது. இதில் ஒன்றரை மணிப்போது இந்தப் புத்தகமும், அரைமணி சைவவினு விடையும், அரைமணி தோத்திரமும்; படிப்பிக்கப்படலாம். இப்புத்தகத்தில் ஒரு பாடம் பெரும்பாலும் ஒரு வாரத்துக்குப் போதியதாகும். பிள்ளைகள் சுலபமாக விளங்குதற்காக உபாத்தியாயர் கதைச் சுருக்கத்தை ஐந்து நிமிஷத்திற் சொல்லிவிட, கதையை ஞாபகப்படுத்தற்காக அவர்கள் பலமுறை வாசித்தபின், அதிலுள்ள சமய உண்மைகளை உணர்த்துதற்காக உபாத்தியாயர் பதினைந்து அல்லது இருபது நிமிஷம் கேள்வி கேட்பது முறையாகும். முதற் பாடத்

திலே கேட்கவேண்டிய அவசியமான வினாக்கள் பின் வருமாறு:

1. சிவபெருமான் எப்படிப்பட்டவரென்று வேதங்கள் சொல்லுகின்றன?
2. ஏன் அப்படிச் சொல்லுகின்றன?
3. கடவுளுக்குச சரீரமாயுள்ளவைகள் எவை?
4. உன்னுடைய சரீரத்தைப் பிறர் வருத்துவது உனக்குப் பிரியமா?
5. நாம் உயிர்களை வருத்துவது கடவுளுக்குப் பிரியமாயிருக்குமா?
6. ஆடு, கோழி முதலியவைகளைக் கொல்லலாமா?
7. மாடு, குதிரை முதலியவற்றிற்கு உணவு கொடுத்து வேலை செய்விக்கலாமா? அவைகளுக்கும் சும்மா அடிக்கலாமா?
8. பிற உயிர்களுக்கு நாம் என்ன செய்தால் கடவுளுக்குப் பிரியமாய் இருக்கும்?
9. நாய், பூனை முதலியவைகளை நாம் நேசிக்க வேண்டுமாயினும, அவைகளை மார்பிலே அணைத்து, நாம் உண்ணும்போது நமது இலையிலே உணவு கொடுத்தல் சரியா?

## ஓர் உபாத்தியாயர் I

மிலேச்ச கண்டத்திலே பெயர் பெற்ற ஒரு சர்வ கலாசாலை உண்டு. அதிலே ஒரு உபாத்தியாயர் இருந்தார். அவர் ஒரு கல்விக்கடல்; விவேகத்திலோ என்றால் அவருக்கு நிகரானவர்களில்லை; ஆயினும் சிறு

வயசிலே அவர் தீயவர்களோடு கூடிக்குடிவகை குடிக்கப் பழகிவிட்டார். அவரிடத்திலே படித்த மாணக்கருள் ஒருவன் சிறந்த விவேகி. அவன் இந்த உபாத்தியாய ருடைய கல்வியையும் விவேகத்தையுங் கண்டு வியந்து அவரிலே மிகுந்த பற்று வைத்தான். அவரே தன்னு டைய குருவென்று எண்ணி அவரைக் கடவுளுக்குச் சமானமாக மதித்தான். அவரும் அவனுடைய விவே கத்தையும் அன்பையுங் கண்டு தம்முடைய சொந்தப் பிள்ளைபோல அவனை நடத்தி வந்தார்.

அவன் அடிக்கடி உபாத்தியாயருடைய வீட்டுக்குப் போகிறவன். ஒருநாள் அவருடைய வீட்டுக்குப் போன பொழுது அவர் "உவிஸ்கி" என்று சொல்லப்படுகின்ற ஒரு குடிவகை குடித்துக் கொண்டிருந்தார். அவன் அதைக் கண்டு தனக்கு சொற்ப உவிஸ்கி தரும்படி கேட்டான். அப்போது அவர்களுக்கிடையிற் பின்வரும் பேச்சு நடந் தது.

உபாத்தியாயர் :— மகனே உலகத்திலேயுள்ள கேடான பொருள்களுள்ளே குடிவகையைப் போல கேடானது வேறொன்றுமில்லை, நீ என்னிலே மிகுந்த பற்றுள்ளவனென்றால், நீ எனக்கு ஒரு உபகாரஞ் செய் தல் வேண்டும். நீ இறக்கும் வரைக்கும் குடிவகைகள் ஒன்றையுந் தொடக்கூடாது.

மாணக்கன் :— ஐயா, பெரியோர்கள் தங்களிலே குற்றஞ் சொல்லுதல் வழக்கம். ஆயினும், அவர்கள் ஒரு காலமும் பிழையான செய்கை செய்யமாட்டார்கள். உங்களைப் போன்ற ஒரு பெரிய மனுஷன் உலகத்திலே இல்லை. நீங்கள் குடிவகை உபயோகிக்கின்றீர்கள். ஆத லாற் குடித்தல் பிழையானதென்று நான் ஒரு காலமும் எண்ண மாட்டேன்,

உபாத்தியாயர் :— அப்பனே, நான் சொல்லுவதை நன்றாகக்கேள். நான் இந்தத் தீய பழக்கத்தைத் தெரியாமற் பழகிவிட்டேன். இதனால் வருகின்ற தீமைகளையெல்லாம் நான் என்னுடைய அநுபவத்திலே கண்டிருக்கிறேன். அநேக சிறந்த வைத்தியர்கள் குடிவகைகளெல்லாம் நஞ்சு என்று சொல்லுகிறார்கள்; நீ ஒரு நல்ல விவேகி; நற்குணங்கள் நிறைந்த பிள்ளை; நீ கெட்டுப்போகக் கூடாது; ஆனபடியாற்றான் குடிவகையை நீ ஒரு காலமுந் தொடக்கூடாதென்று நான் உன்னைக் கேட்டுக் கொண்டது. குடிவகையின் பொல்லாங்குகளை நான் அறிந்த பின்பு இந்தத் தீய பழக்கத்தை விட்டுவிட அதிகம் முயற்சி செய்தேன்; எனக்கு வயசு போய்விட்டபடியால் நெடுங்காலமாகப் பழகிய இந்தப் பழக்கத்தை விட்டுக் கொள்ள முடியாமல் நான் கஷ்டப்படுகிறேன்.

மாணாக்கன் :— குடிவகைகள் சில வியாதிகளுக்கு மருந்தாகக் கொடுக்கப்படுகின்றன; 'விறண்டியிலே' 'குவினி'னைச் சேர்த்துக் குடித்தால் காய்ச்சல் மாறுமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

உபாத்தியாயர் :— வைத்தியம் நன்றாகத் தெரியாத காலத்திலே படித்த வைத்தியருட் சிலர் மாத்திரம் குடிவகைகளை மருந்தோடு சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். 'விறண்டி, தனியே காய்ச்சலை மாற்றினது கேள்விப்பட்டிருக்கிறாயா'?

மாணாக்கன் :— நான் கேள்விப்படவில்லை.

உபாத்தியாயர் :— ஆதலால், காய்ச்சலை மாற்றுவது விறண்டியன்று என்பது தெரிகின்றது. காய்ச்சலை மாற்றுவது 'குவினின்'. விறண்டி காய்ச்சலை அதிகப்படுத்தும்.

விறண்டியோடு சோாமற் குவினின் கொடுக்கப்பட்டால் காய்ச்சல் விரைவாக நீங்கும்?

## ஓர் உபாத்தியாயர் II

மாணக்கன் :— குடிவகைகள் உணவை நன்றாகச் சமிப்பிக்குமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

உபாத்தியாயர் :— குடிவகைகள் இரைப்பையைப் புண்படுத்துவன என்று சிறந்த வைத்தியர்கள் சொல்லுகின்றார்கள் அவைகள் உணவிலே மனமில்லாமற் செய்து உடம்பு மெலிய வருந்துவதை நீ காணவில்லையா? எத்தனை மூடர்கள் பிள்ளைப் பெற்ற பெண்களுக்கு அந்த நேரத்திலே குடிவகைகளை வாங்கிக் கொடுக்கிறார்கள். அதனாலே அவர்களுடைய குடலும் கருப்பையும் புண்ணாகி எத்தனையோ வியாதிகள் அவர்களுக்கு உண்டாகின்றன.

மாணக்கன் :— குடிக்கிறவர்கள் மிகவும் பலசாலிகளாய் இருக்கிறார்கள். அதற்குக் காரணமென்ன?

உபாத்தியாயர் :— அவர்கள் இயல்பிலே பலசாலிகள். பலத்தைக் கெடுப்பதாகிய குடிவகையைப் பருகினாலும், இயல்பாயுள்ள பெலன் விரைவிற் குறைகிறதில்லை, ஆயினும், கடைசியில் அது அவர்களை மெலியப்பண்ணி வியாதிக்காரராக்கியே விடும். தசையை வளர்க்கும் பொருள்களுக்கு வாயுசப் பொருள்கள் என்று பெயர், வாயுசம் குடிவகைகளொன்றிலுமில்லை; அவைகள் தசையை வளர்ப்பதெப்படி? மெலிந்த உடம்புள்ளவர்கள் குடித்துப் பலசாலிகளானதை நீ கண்டிருக்கிறாயா?

மாணக்கன் :— நான் காணவில்லை; குடிவகைகளை உபயோகித்தாற் களையாமல் வேலை செய்யலாமென்று சொல்லுகிறார்கள்.

உபாத்தியாயர் :— குடிவகை புத்தியைக் கெடுப்பதினலே, களைவந்தாலும் அது தோற்ருது. களைத்திருக்கிறபோது வேலை செய்தால் உடம்பு விரைவிற் கெட்டுப்போம். ஆதலாற் குடிவகையினுற் களையை மறைத்தல் உடம்புக்குப் பெருந்தீமை. இதை அறிந்துதான் யுத்தம் நடக்கிற காலங்களிலே அரசாட்சியார் ஊரிலே குடிவகைகள் பருகக்கூடாதென்று கட்டளைபண்ணுகிருர்கள். குடிக்கும் போர்வீரர் விரைவிற் களைத்துப் போவார்கள் ; அப்படிக் களைத்தால் தோல்வியடைவார்கள். குடிக்கிறவர்கள் நெடுநேரம் வேலை செய்யமாட்டார்கள். ஆதலால், போர்க்களத்துக்கு வேண்டிய வாள், துவக்கு, பீரங்கி, வெடிமருந்து முதலியவற்றைச் செய்யும் வேலைக்காரர் குடித்தால் நன்ருக வேலை செய்யமாட்டார்கள். அதனுலே போர்க்களத்துக்கு வேண்டிய கருவிகள் வேண்டியளவு செய்யப்படமாட்டா. வேண்டிய அளவு இல்லாவிட்டாற் போர்வீரர் தோற்றுப்போவார்கள். இந்தக் காரணங்களாலே அரசாட்சியார் போர்க்காலத்திலே ஒருவரும் குடிவகை உபயோகிக்கக்கூடாதென்று கட்டளையிடுகிருர்கள். குடிவகை உடம்பைக் கெடுப்பதற்கும் இது நல்ல சாட்சியல்லவா ? ஊரிலே மிகச் சிறந்த வைத்தியர்களும் மந்திரிமாரும் அரசாட்சியாருக்குச் சொன்னபடியாலல்லவோ அரசாட்சியார் இப்படிச் செய்கிருர்கள்.

மாணக்கன் :— எத்தனையோ வைத்தியர்கள் குடிக்கிருர்களே ; அது உடம்புக்குக் கூடாதென்ருல் ஏன் அவர்கள் குடிக்கிருர்கள் ?

உபாத்தியாயர் :— உலகத்திலே பிழை செய்கிறவர்கள் பெரும்பாலும் தாங்கள் செய்வது பிழையென்று நன்ருக அறிந்துதான் செய்கிருர்கள். பொய் சொல்லுவது குற்றமென்பது பொய்யனுக்குத் தெரியும். சூதாடு

வது குற்றமென்று சூதாடுகிறவன் அறிவான். அப்படியே குடிவகை பருகும் வைத்தியனுக்குக் குடிவகை தீயதென்பது நன்ருகத் தெரியும். தீய பழக்கங்களிலே மனிதருக்கு ஒரு விருப்பமுண்டு. தீய பழக்கம் பழகினுல் அதை விடுவது பிரயாசம்; ஆதலினுற்றுன் அநேகர் தாங்கள் செய்வது குற்றமென்றறிந்தும் குற்றத்தைச் செய்கிறுர்கள். குடிவகை உடம்புக்கு மாத்திரம் நட்டமானதா? அது மூளையைப் பழுதாக்கி, எல்லா விதமான துஷ்டச் செய்கைகளுக்கும் ஏவிவிடும். ஆதலால், குடிவகையைப் போலத் தீய பொருள் வேறென்றுமில்லை. குடிவகையில் ஒவ்வொரு துளியும் நஞ்சு. இதை நன்ருக உணர்ந்து கொள்.

மாணுக்கன் :— ஐயா, நீங்கள் என்ன நியாயத்தைச் சொன்னுலும் எதையும் என்னுடைய மனம் ஏற்றுக் கொள்ளமாட்டாது. நீங்களும் என்னுடைய குரு; நான் உங்களைக் கடவுளுக்குச் சமமாக எண்ணியிருக்கிறேன். ஆனதினுல், நீங்கள் என்னதான் சொன்னுலும், நீங்கள் செய்கிற செய்கை குற்றமான செய்கையென்று நான் ஒரு காலமும் எண்ணமாட்டேன். நான் குடிவகை உபயோகிக்கவே போகிறேன்; இது நிச்சயம்.

உபாத்தியாயர் :— ஐயையே! நான் மண்ணுனது போதாமல், அருமந்த பிள்ளையாகிய உன்னையும் மண்ணுக்கவோ? இன்றைக்கே நான் இந்தக் குடிக்கிற பழக்கத்தை விட்டுவிடுகிறேன்.

மாணுக்கன் :— நீங்கள் குடிக்கிறதைவிட்டால், நான் ஏன் குடிக்கப் போகிறேன்?

அன்றைக்கே உபாத்தியாயர் குடியை விட்டார். அதன்பின் அவர் தம்முடைய காலத்தை மிகவும் பிரயோசனமாகக் கழித்து அநேக அரிய நூல்களைச் செய்தார்.

## குருவும் சீஷனும் I

குரு:— ஓய் இராமசுவாமி! எங்கே போகிறீர்?

சீஷன்:— சுவாமி! நமஸ்காரம், நாளைக்கு வைரவர் கோயிலிலே ஒரு ஆடு பலிவெட்ட வேண்டும். அதற்காக ஒரு ஆடு விலைக்கு வாங்கப் போகிறேன்.

கு:— ஐயையோ! என்ன பாதகம்! பஞ்சமாபாதகங்களுள்ளே மிகக் கொடிய பாதகங் கொலையல்லவா? உலகத்திலேயுள்ள ஒவ்வொரு பிராணியையும் உண்டாக்கினவர் யார்?

சீ:— கடவுள்தான் எல்லாப் பிராணியையும் உண்டாக்கினர்.

கு:— அப்படியென்றால், கடவுள் எல்லாப் பிராணிகளுக்கும் பிதாவாக இருக்கிறாரல்லவா? உம்முடைய பிள்ளையை யாராவது வெட்டிக் கொல்லுவது உமக்குப் பிரியமாயிருக்குமா?

சீ:— என்னுடைய பிள்ளைக்கு மேலே ஒருவன் தொட்டாலும் நான் பொறுப்பேனோ? என்னுடைய பிள்ளையை ஒருவன் கொல்லுவதென்றால், எப்படிப் பொறுப்பேன்?

கு:— உம்முடைய பிள்ளைக்கு மேலே மற்றவர்கள் தொடுகிறதும் உமக்குப் பிரியமில்லாவிட்டால் கடவுளுடைய பிள்ளைகளாகிய ஆடுகள் கோழிகள் முதலியவற்றை நீங்கள் கொல்லுவது கடவுளுக்கு விருப்பமாயிருக்குமா? கடவுளாலே உங்களுக்கு அளவில்லாத தண்டனை வந்து சேருமே. நீங்கள் உங்கள் வீடுகளிலே தானும் அவைகளைக் கொல்லுவது பெரும் பாதகம்.

அப்படியிருக்க ஒரு கோயிலிலே கடவுள் முன்னிலையிலே அவைகளை வெட்டுவது எவ்வளவு பெரும் பாதகம்! ஒருவன் உன் வீட்டுக்கு வந்து உனக்கு முன்பாக உன் பிள்ளையை வெட்டுவானானால் உனக்கு என்ன விதமாய் இருக்குமோ, அப்படியேதான் கோயிலிலே சுவாமியுடைய முன்னிலையில் ஆட்டை வெட்டுகிறது சுவாமிக்கு இருக்கும். கோயிலிலே ஆடுகள் கோழிகள் வெட்டுவதைப் போலப் பாதகம் வேறொன்றுமில்லை. சீ. இது இவ்வளவு பெரும்பாதகமாய் இருந்தால், நாங்கள் ஆடுகளை வெட்டுகிறபோது கடவுள் எங்களுக்கு ஒரு பொல்லாங்கும் வரப்பண்ணாமலிருப்பதற்குக் காரண காரணமென்ன?

கு: உலகத்திலே எத்தனை மனிதர் வேறெத்தனை பொல்லாங்குகளைச் செய்கிறார்கள்? அவர்களுக்கெல்லாம் கடவுள் உடனே தண்டனை செய்கின்றாரோ? இல்லையே இந்தப் பிறவியில் தண்டனை கிடையாவிட்டால், அடுத்த பிறவிகளிலாவது நிச்சயமாகக் கிடைக்குமல்லவா? நரகத்திலே கிடந்து எவ்வளவு காலம் வருந்துவார்கள்; உலகத்திலே வரக்கூடிய தண்டனைகள் உங்களுக்குப் போதியனவல்ல. நல்லவர்களைக் கடவுள் உடனே தண்டிப்பாராம். மற்றையவர்களைத் தாமதித்துத் தண்டிப்பாராம். "அரசன் அன்றறுக்கும், தெய்வம் நின்றறுக்கும்" என்ற பழமொழி உமக்குத் தெரியாதா?

சீ: நாங்கள் துட்ட தெய்வங்களுக்குத்தானே ஆடு வெட்டுகிறோம்; சிவபெருமானுக்கு முன்னே ஆடு வெட்டுகிறோமா?

கு: உம்முடைய மறுமொழியில் மூன்று பிழைகள் இருக்கின்றன. முதலாவது குளிர்மையா நெருப்பு எங்கேயாவது கண்டீரா? துட்ட தெய்வமென்று சொல்லு

வது குளிர்ந்த நெருப்பு என்று சொல்லுவது போலிருக்கிறது. தெய்வமென்றது எங்களுக்கு மேற்பட்டது, எங்களிலும் உயர்ந்ததன்மையுள்ளது. ஆதலினால், தெய்வம் துட்டத்தனமாயிருக்கமாட்டாது; துட்டதெய்வமென்று ஒன்றில்லை. தெவ்வங்களெல்லாம் நல்ல தெய்வங்கள் தாம். இரண்டாவது, வைரவக் கடவுள் சிவபெருமானுடைய திருக்குமாரரென்று நூல்கள் சொல்லுகின்றன. திருக்குமாரரென்றது அவருடைய சத்தியை, அவரும் அவருடைய சத்தியும் வேறல்ல, ஆதலால், வைரவக்கடவுளும் சிவபெருமானும் ஒன்றேயாம். வைரவக் கடவுள் பிரமாவினுடைய தலையைக் கிள்ளினாரென்று புராணங்கள் சொல்லுகின்றன. திருநாவுக்கரசு சுவாமி சிவபெருமானை நோக்கி, "பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி" என்று தேவாரத்திலே பாடுகின்றார். ஆதலால் வைரவக் கடவுளும் சிவபெருமானும் ஒன்றேயாம். மூன்றாவது, எந்தத் தெய்வத்திற்கு முன்னேயும் ஆட்டை வெட்டுவது பாவந்தானே.

## குருவும் சீஷனும் II

சீஷன்: நாங்கள் ஆடு வெட்டுவது வைரவருக்காகவன்று; வைரவருடைய கலைகளுக்காக.

குரு: கலைகளென்றால் என்னவோ?

சீ: கலைகளென்றது அவருடைய வேலைக்காரர். நாங்கள் மாமிசம் புசியாவிட்டாலும் எங்களுக்கு வேலை செய்கிறவர்கள் மாமிசம் புசிப்பதில்லையா? அப்படித்தான் வைரவருடைய கலைகளும் ஆடு கோழிகளை உண்ணுகின்றன.

கு: எங்களுக்கு உணவுக்கு நெல்லு வேண்டும்; அதற்காக வயறசெய்கை பண்ணுகின்றோம்; அந்த

வேலைக்கு உதவியாகக் கூலியாளரைப் பிடிக்கிறோம். வைரவ சுவாமிக்கு எங்களைப் போலப் பசியுண்டா? அவருக்கு உணவு வேண்டுமா? அவருக்கு எத்தனை பரப்பு வயலிருக்கிறது? அவருக்குக் கூலியாளரேன்? கலைகளேன்? அவருக்குத் தேவையானது என்ன இருக்கிறது? அவர் பரிபூரணரல்லவா? அன்றியும், நாங்கள் தனியே ஒரு வேலை செய்யமாட்டாமல் இருக்கிறபடியால் வேலைக்காரரை வைத்திருக்கிறோம். அவர் செய்ய மாட்டாதது ஏதும் இருக்கிறதா? அவர் சர்வவல்லமையுள்ளவரல்லவா? அவருக்கு வேலைக்காரரேன்? கலைகளேன்?

சீ: எங்களுக்கு இவையெல்லாந் தெரியுமா? நீங்கள் இப்படிச் சொல்லித் தந்தாலல்லவோ எங்களுக்குத் தெரியும். ஆனாலும் நெடுங்காலம் இந்த வழக்கம் இருக்கின்றதே, அது எதனாலே?

கு: பழைய சரித்திரமெல்லாம் நமக்கேன்? யாராவது அறிவாளிகள் ஆடு கோழி நேர்ந்து விட்டதையாவது, வெட்டினதையாவது அறிந்திருக்கிறீரா? மூடச் சனங்களுடைய செய்கைக்கு நியாயமேது? இது பிழையான செய்கையென்றது உமக்குத் தெரிகிறதா, இல்லையா?

சீ: அண்ணமார் காத்தவராயர் முதலிய தெய்வங்களுக்கு ஆடு வெட்டக் கூடாதா?

கு: எந்தப் பிசாசுகளாயிருந்தாலும் கடவுள் படைத்த ஒரு பிராணியைக் கொல்லக் கூடாது. நீ சுகமாய் விளங்கக்கூடிய ஒரு நியாயஞ் சொல்லுகிறேன். சில பறையர் செத்தமாட்டைத் தின்னுகிறார்கள். அவர்கள் அமாவாசையிலே விரதமிருக்கிறார்கள். விரத நாளிலே அவர்கள் மச்ச மாமிசம் தின்பார்களா? மச்ச மாமிசம் சமைத்த சட்டியிலேதானுஞ் சமைக்கமாட்டார்களே,

செத்த மாடு தின்னுகிறவனுக்கு மச்சமாமிசம் பட்ட சட்டியே தள்ளுபடியென்றால், உன்னுடைய தெய்வத்திற்கு ஆட்டிறைச்சியும் கோழியிறைச்சியும் சம்மதமாயிருக்குமா?

சீ: சுவாமிகள் சொல்லுகிற வெல்லாஞ்சரி, ஆயினும் ஒருவன் ஒரு வியாதியால் வருந்துகிறபொழுது "வைரவருக்கு ஆடு வெட்டுவேன்" என்று நேர்ந்தால், அந்த வியாதி மாறுகிறதற்குக் காரணம் என்ன? என்னுடைய மகன் சென்ற சித்திரை மாதம் கடும் வருத்தமாயிருந்தான்; கணுக்கேணியில் வைரவருக்கு ஒரு ஆடு வெட்டுவேன் என்று நேர்ந்தேன்; வருத்தஞ் சுகமாய் விட்டது, காரணமென்ன?

கு: வைரவருக்கு ஆடு வெட்டுவேனென்று நேர்ந்ததினலே, நாலு நாளைக்கு முந்தி மாறுகிற வியாதி நாலு நாள் பிந்தி மாறும். அதுதான் நீ கண்ட பலன். இங்கிலாந்திலே முற்காலத்தில் கையிலே கத்தி வெட்டினல், வெட்டின கத்திக்கு மருந்து போடுவார்களேயல்லாமல், வெட்டுக்காயத்திற்கு மருந்து போடார்களாம்; அந்த மருந்தை வெட்டுக் காயத்திற்குப் போட்டால் நாலு நாள் முந்தி மாறுகிற காயம் பிந்தி மாறுமாம். ஏனெனில் அவர்களுடைய அந்தக் காலத்து மருந்து காயத்தைப் பெருப்பிப்பதல்லாமல், காயத்தை மாற்றுவதன்று. அப்படியே, ஒருவருக்கு வருத்தம் வந்தால் அதற்காக தெய்வங்களுக்கு ஆடு கோழி நேருவது வியாதியைக் கூட்டுமல்லாமல் குறையாது. ஆடு வெட்டுவேன் என்று நினைப்பது தீமை. தீமை செய்தால், தீமைதான் வரும், அதாவது வியாதி அதிகப்படும்.

சி: ஆடு கோழியைப் பலி செய்வது பிழையென்றால், நாங்கள் பலி செய்ய வேண்டியது எதை?

கு: பலி என்ற சொல்லின் கருத்து கொடுக்கப் படுவது என்பது, நாங்கள் கடவுளுக்குக் கொடுக்க வேண்டியவைகள் நமது பொருள், உடல், ஆவி என் பனவாம். இந்த மூன்றையும் கடவுளுக்குப் பலி செய்து விட்டால், நமக்கு மோட்சங்கிடைக்கும். நமக்குள்ள பொருள் எல்லாவற்றையும் புண்ணியமாகச் செலவு செய்ய வேண்டும். நம்முடைய உடலைக்கொண்டு கடவுளுக்குத் திருத்தொண்டு செய்ய வேண்டும். நம்முடைய மனத்தி னாலே கடவுளை எப்போதும் நினைக்க வேண்டும். இந்த மூன்று பலிகளுந்தான் நாங்கள் செய்யவேண்டிய பலிகள்; தாயுமான சுவாமிகள், "வைத்த பொருள் உடல் ஆவி மூன்றும் நின் கைவசமெனவேயான் கொடுக்க" என்றும், "துள்ளும மறியாம் மனத்தைப் பலிகொடுததேன்" (ஆடு போலத் துள்ளிக்கொண்டு திரிகின்ற மனத்தைப் பலி கொடுத்தேன்) என்றும் சொல்லுவதைக் காண்க.

சீ: சுவாமி, பலியென்பதன் கருத்து எனக்கு இப் போது நன்றாக விளங்குகிறது. நான் இனி ஒரு கால மும் ஆடு வெட்டமாட்டேன். அதற்குப் பதிலாக என் னுடைய மகனை ஒவ்வொருநாளும் கோயிலுக்குப் போகப் பண்ணுவேன். நமஸ்காரம், நான் போய் வருகிறேன்.

கு: ஆசீர்வாதம்; போய் வாரும்.

சைவபோதம்.

## சைவசமய சாரம்

### கடவுள்

ஆகாயத்தை இராக்காலத்திலே அண்ணாந்து பார்த்தால் அதிலே எண்ணில்லாத நட்சத்திரங்கள் மின்னி விளங்குவதைக் காணலாம். இந்த நட்சத்திரங்கள் வெகு தூரத்திலே இருந்தாற் சிறியவைகளாகத் தோன்றுகின்றன. அவைகள் உள்ளபடி உள்ளபடி மிகப் பெரியவைகளேயாம். சூரியன் பூமியிலும் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது, எல்லா நட்சத்திரங்களும் சூரியனிலும் பெரியவைகளே. ஆதலால், இந்தப் பூமியையும், சூரியனையும், எண்ணில்லாத நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து உண்டாக்கிய கடவுளுடைய பெருமையை யார் தான் சொல்ல வல்லவர். இந்த அளவில்லாத பெருமையை உடைய கடவுள் அன்பையே வடிவமாக உடையவர்.

ஆதலால், அவர் நம்மிடத்திற் கொண்ட அன்பும் அளவில்லாததாகவே இருக்கும். பெற்ற தாயானவள் குழந்தையிடத்தே எவ்வளவு அன்புடையவளாய் இருக்கிறாள். கடவுளுடைய அன்பு தாயினுடைய அன்பினும் கோடாநுகோடி மடங்கு அதிகமாய் இருக்குமல்லவா? தாயைக் காணும்போது குழந்தை எவ்வளவு ஆநந்தம் அடைகிறது. ஆதலால், தாயினும் பார்க்க அதிகமான அன்பையுடைய கடவுளை நினைக்கும்போதும், அவரைக் கோயிலிலே காணும்போதும் நாம் எல்லையில்லாத ஆநந்தம் அடைய வேண்டும்; நமது மனம் கரைந்து உருகுதல் வேண்டும்.

தாய் தந்தையர் குழந்தைக்கு வேண்டிய ஊண், உடை முதலியவற்றை, அக்குழந்தை கேளாமலிருக்கவே

கொடுத்து விடுகிறார்கள். குழந்தைக்கு வேண்டியவற்றுட் சிலவற்றை அவர்கள் அறிய மாட்டார்கள். அவற்றைக் குழந்தை அவர்களுக்குச் சொல்லிய பின்பு அவர்கள் கொடுக்கிறார்கள். கடவுள் எல்லாம் அறிபவர் ஆதலால், நமக்கு வேண்டிய யாவற்றையும் அவர் தாமாகவே தருவர். நாம் அவரை ஒன்றுங் கேட்க வேண்டியதில்லை. அவரை வணங்குதலும், துதித்தலுமே நாம் செய்ய வேண்டியவை.

இந்த உடம்பு நம்மோடு எப்போதும் இருப்பதன்று. ஒரு நாளைக்கு நாம் இதைவிட்டு விலகவேண்டிவரும். அப்போது நமது தாய் தந்தையரும் சுற்றத்தவரும் நண்பரும் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள். நமது பொருள் பண்டங்களும் தொடர்பற்றுப்போம். கடவுள் ஒருவரே எக்காலத்திலும் எல்லையில்லாத அன்பைச் சொரிந்து கொண்டு நம்மோடு துணையாய் நிற்கும் மெய்ப் பொருள்.

ஆதலால், நம்முடைய மனம் அவரையே நாடுதல் வேண்டும். நமது சீவனத்துக்கு வேண்டிய தொழில்களை நாம் செய்யும்போது நமது மனம் அவற்றிலே செல்லுமாயினும் அதன் நாட்டம் எப்போதும் கடவுளிடத்திலேயே இருத்தல் வேண்டும்.

## கடவுள் வழிபாடு

கடவுளுடைய திருவடிகளை அடைதற்காகவே நாம் பிறவி எடுத்தோமாதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுதற்குக் கல்வியும் வேண்டப்படுதல் போல ஆன்மா

நயப்படுதற்குக் கடவுள் வழிபாடு வேண்டப்படும், உடம்பும் மனமும் ஆன்மாவின் கருவிகள்; உடம்பு தொழில் செய்தற்கும், மனம் ஆராய்தற்கும் கருவியாயுள்ளனவ. கருவிகளினும் பார்க்கக் கருவிகளையுடையவன் மேலானவன். ஆதலால், உடம்பினும் மனத்தினும் மேலானதே ஆன்மா. ஆகவே உடம்பை நயப்படுத்துதற்கு வேண்டிய கல்வியினும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு. அன்றியும், இவைகள் ஆன்மாவுக்குக் கருவியாயிருத்தலால், இவற்றின் முக்கியமான தொழில் ஆன்மாவுக்கு வேண்டிய கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதலேயாம். 'திருக்கோயிலை வலம் வந்து சுவாமிக்குப் பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினாற் பயனில்லை' என்றார் திருநாவுக்கரசு நாயனார். 'கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்குத் துணையாய் நில்லாத கல்வியினாற் பயனில்லை' என்றார் திருவள்ளுவ நாயனார்.

கடவுள் வழிபாட்டிற்கு உரிய நேரங்கள் காலையும் மாலையுமாம். இவ்வழிபாடு பலவாறாகச் செய்யப்படுகின்றது. சிலர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பாடிக் கடவுளைத் தோத்திரம் செய்து தியானித்துச் சிந்தித்து வணங்குவர். வேறு சிலர் இவற்றோடு திருஐந்தெழுத்தை ஓதுவர். சுப்பிரமணியர் தொண்டர் திருப்புகழ் முதலிய அருட்பாக்களையும் திரு ஆறெழுத்தையும் ஓதுவர். வேறு சிலர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுள் ஒன்றுக்குப் பூசை செய்வர். மற்றுஞ் சிலர் சிவலிங்க பூசை செய்வர், இன்னுஞ் சிலர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வழிபடுவர்.

கடவுளை நாம் தரிசிக்கும் போதும் பூசிக்கும் போதும் 'எங்கும் வியாபகமாயுள்ள இறைவனே!

சிறியேனுடைய வழிபாட்டிற்காக இங்கு எழுந்தருளி யிருக்கும் இப்பெருங் கருணையை நான் எவ்வாறுதான் துதிப்பேன்!! உன்னுடைய திருமுன்னிலையில் நின்று உன்னுடைய கருணையைப் பருகும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே! உன்னை நான் மறந்து விடுகிறேன்!!!"

என்று அந்த அந்த நேரம் மனதிலே வருவனவற் றைச் சொல்லி ஆனந்திப்போம். கடவுள் வழிபாடு இவ் வளவோடு நில்லாமல் நமது பிற செயல்களிலும் செறிந் திருக்கின்றது. நித்திரை விட்டெழும்பும்போது 'சிவசிவ' என்று சொல்லி எழுந்திருக்கிறோம். உடனே கை வாய் கழுவி 'சிவசிவ' என்று சொல்லித் திருநீறு பூசுகிறோம். குளிக்கும்போது கடவுளைச் சிந்திக்கிறோம். சாப்பிடும் போது கடவுளுக்கு நிவேதித்துச் சாப்பிடுகிறோம். சாப் பாடு முடிந்தவுடனே 'சிவசிவ' என்று சொல்லித் திரு நீறு பூசுகிறோம். வெளியே போகும்போது அப்படியே செய்கிறோம். நித்திரைக்குப் போகும்போது சிவபிரா னைத் தோத்திரித்து திருஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு உறங்குகிறோம்.

கடவுள் வழிபாடு நமது ஒழுக்கத்தையும் சீர்படுத் தக்கூடியது. தீய ஆசைகளேனும் தீய எண்ணங்களே னும் எழும்போது சிவசிந்தனை செய்தால், அச்சிந்தனை இவற்றைக் கருக்கி மீளவிடாமல் அழித்துவிடும். அது மனத்தைக் தூயதாக்கி இறைவன் எழுந்தருளியிருத்தற் குத் தகுதிவாய்ந்த இடமாக்கும்.

நாம் எதை அதிகமாகச் சிந்திக்கிறோமோ அத னிடத்தில் நமக்கு உறுதியான பற்று உண்டாகின்றது. கள்ளை அதிகமாக நினைக்கிறவனுக்குக் கள்ளுண்ணல் ஒரு பைத்தியமாகின்றது. அறிவிலே அதிகமான விசார முள்ளவனுடைய மனம் கல்வியிலன்றி வேறொன்றிலும்

செல்லாது. சங்கீதத்தை அதிகமாகச் சிந்திப்பவன் சங்கீதமயமாகின்றான். கடவுளிடத்திலே சிந்தனையைச் செலுத்துபவன் கடவுளின் அருள்மயமாகின்றான்.

## சைவ வாழ்க்கை

நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும்போது நம் மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும்போது அது கிடைக்குமாயின், இன் புறுகின்றோம். கள்ளுணவை விரும்புகிறவன், அதைப் பருகும்போது இன்புறுகின்றான். அன்றியும் நாம் விரும்ப மாட்டாத ஒன்று நம்மைச் சேராவிட்டாலும் நாம் இன் புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோஷப்படுகிறான்.

இப்படியின்றி, நாம் விரும்பிய ஒன்று கிடையா விட்டாலும், விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகின்றது. எனக்காயினும், என்னைச் சேர்ந்தவர்க் காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந் தால் துக்கம் உண்டாகின்றது. யாராயினும் இடர் செய் தால் அவரிடத்திலே கோபம் உண்டாகின்றது. ஏதாயி னும் இடர்வரப் போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகின்றது.

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக் கத்துக்காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயி னும் இடம்வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீலமான ஆகாயமும், கரியதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும். அது போலச் சைவமாகிய

கண்ணாடியாற் பார்த்தால், யாவும் உவப்பானவைக ளாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடையாவிடில் துன்பமில்லை; எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை; என் குழந்தை இறந்துபோம் என்று அஞ்சுவதில்லை; என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலுமேயன்றிக் கோபித்தலில்லை.

சைவ சமயத்தின்படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கின்றோம். இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் சிவபெருமான்; ஆதலால் அவருக்கு "வைத்தியநாதன்" என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு, ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்கமாட்டான். அது போல, நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு; வைத்திய நாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்குக் கிடையாவிடின், அது நமக்கு ஆகாததென்று உணர்ந்து, அது கிடையாமற் போனதைப் பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்பமாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான், ஆமணக்கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கிறான்; பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான். அது போல, சிவபிரானாகிய வைத்திய நாதர் நாம் விரும்பமாட்டாதவற்றை நமக்குச் சேர்த்தலும், கொடிய வேதனைகளை ஆக்குதலும், நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழும்படி வைத்தற்கேயாம். ஆதலால், நம்முயற்சிகளைக் கடந்து, நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும், நாம் வேதனைகளில் அகப்பட்டாலும், அவைகள் நமது நன்மைக்காகக் கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப் பற்றி

இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்து போனதும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறியவேண்டியதில்லை. யாவும் அவருடைய செயலே; அவர் செய்வதெல்லாம் நன்மையே; என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால் அப்பர் சுவாமிகள் பாடியருளியபடி, என்றும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம். துக்கம், கோபம், அச்சம் ஆகிய மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெருமுயற்சி செய்து பொருளைத்தேடி கட்டத்தைத் தீர்த்தலும், எனக்கு யாராவது இடர்செய்ய வரும்போது கோபம் கொள்ளுதலின்றி அவனைத் தடுத்தலும், குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்துபோனால் பிறந்தவர் இறக்கை திண்ணம் என்பதைக் கண்டு மனங்கலங்காதிருத்தலும் சைவர்களெல்லாரும் செய்யத்தக்கவைகளாம்.

சைவசமய சாரம்.

---

# சைவபோதம் இரண்டாம் புத்தகம்

## சைவசமய மாட்சி

உலகத்திலேயுள்ள சமயங்கள் பல. அவற்றுள் நமது நாட்டிலே வழங்குஞ் சமயங்கள் நான்கு. அவை சைவ சமயம், புத்த சமயம், கிறிஸ்து சமயம், இஸ்லாம் சமயம் என்பன. இவற்றுள் புத்த சமயம் 2450 வருஷங்களுக்கு முன் தோன்றியது. கிறிஸ்துவம் 1950 வருஷங்

களுக்கு முன் உண்டானதாம். இஸ்லாம் சமயம் 1300 வருஷங்களுக்குமுன் உண்டானது. சைவ சமயம் இன்ன காலத்திலே உண்டானதென்பது ஒருவராலும் சொல்லிக் கொள்ள இயலாதது. ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த அருச்சுனன் முதலியோர் சைவசமயிகளாயிருந் தார்கள். அருச்சுனனுக்குப் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த இராமர் முதலியோருஞ் சைவசமயிகளே. ஆதலாற் சைவசமயம் சரித்திர காலங்களுக்கு அப்பாற் பட்டதாய் உள்ளது.

புத்த சமயம் கௌதமபுத்தராலும் அவருடைய சீடராலும் வட இந்தியாவிலே செய்யப்பட்டதெனச் சரித் திரங்கள் சொல்லுகின்றன. புத்தர் உண்டாக்கிய சமய மாதலால் இதற்குப் புத்த சமயம் என்று பெயர். இஸ் லாம் சமயம் முகம்மது என்பவரால் அராபிய தேசத் திலே உண்டாக்கப்பட்டது. கிறிஸ்து சமயம் கிறிஸ்து என்பவராற் பலஸ்தைன் என்னும் ஊரிலே உண்டாக்கப் பட்டதென்று பலர் சொல்லுகிறார்கள். கிறிஸ்து செய்த சமயமாதலால் இதற்குக் கிறிஸ்து சமயம் என்று பெயர். சைவ சமயம் என்பதற்குச் சிவத்தை அடையச் செய்யும் சமயம் என்பது கருத்து, சிவம் என்பது கடவுள்.

எல்லாப் புண்ணியங்களையுஞ் சொல்லுவது சைவ சமயம் ஒன்றே. கள்ளு முதலிய வெறிப்பொருள்களை உண்ணாமையும், தாழ்ந்த உயிர்களையுங் கொல்லாமையும், புலாலுண்ணாமையும் புண்ணியங்களென்று சைவசமயஞ் சொல்லும். சைவசமயத்தின்படி சரியாய் நடப்பவர்கள் கடவுளை அடைவார்கள். இன்னும் பலவகைகளாலும் சைவசமயம் மற்றைய எல்லாச் சமயங்களிலும் மேலான தாயுள்ளது. அவைகளைப் பின்னே காண்க.

ஈரைந்து பத்து என்பது ஓர் உண்மை. இது எக்காலத்திலும் உண்மையாயுள்ளது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னும் ஈரைந்து பத்தேயாம். ஈரைந்து பத்து ஆனது ஒரு குறித்த காலத்திலே அன்று. இப்படியே உண்மைகள் எவற்றுக்குந் தொடக்கமில்லை. ஆதலால் உண்மைகளெல்லாம் அநாதி என்று சொல்லப்படும். சைவசமயக் கொள்கைகள் உண்மைகள் ஆதலால் சைவசமயக் கொள்கை அநாதி.

ஈரைந்து பத்து என்ற உண்மை விவேகமுள்ள மனிதர் யாவருக்கும் விளங்கும். இதை அறிந்தவர்கள் காலத்துக்குக் காலம் கணக்குப் புத்தகங்களிலே பெருக்கல் வாய்பாட்டிலே எழுதியிருக்கிறார்கள் உபாத்தியாயர்கள் இதைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அது போல, கடவுள் அருளிய ஞானத்தைப் பெற்றவர்கள் சைவசமய உண்மையை உணருபவர்கள். அவர்கள் அந்த உண்மையைக் காலத்துக்குக் காலம் மற்றையோர் அறிவதற்காகச் சொல்லியிருக்கிறார்கள். கடவுளும் சைவ சமய உண்மையை நேரே உபதேசித்தருளினார். இப்படியாக ஞானிகளாலும் கடவுளாலும் அருளிச் செய்யப்பட்ட சைவசமய நூல்கள் பல. பலவாயிருந்தாலும் அவை சொல்லும் உண்மை ஒன்றேயாம்.

சைவசமய நூல்கள் வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், மெய்கண்ட சாத்திரம் முதலியனவாம். இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு வேதங்களும், காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும் கடவுளால் அருளப்பட்டவை. இவை வடமொழியில் உள்ளன; ஒவ்வொரு படைப்புக் காலத் தொடக்கத்திலும் பக்குவமுள்ள ஆன்மாக்களுக்குக் கடவுளால் உபதேசிக்கப்படுவன. படைப்புக்குத் தொடக்கமில்லாமையால், ஒவ்வொரு சிருட்டியிலும் உபதேசிக்கப்

படுவனவாகிய வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் தொடக்க மில்லையாம்; தேவாரம் திருநாவுக்கரசு சுவாமிகளாலும், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் தமிழிலே பாடப்பட்டவை. திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் தமிழிலே பாடப்பட்டது. திருமந்திரம் திருமூலநாயனாரால் தமிழிலே பாடப்பட்டது. மெய்கண்ட சாத்திரம் பதினான்கும் தமிழிலே பாடப்பட்டவை. இவை சைவசமயத்துக்குப் பிரமாணமாயுள்ளவை. இவை தவிரப் புராணங்கள் இதிகாசங்களென்று இரண்டு வகையான சைவநூல்களுண்டு. இவை பெரும்பாலும் பழைய சரித்திரங்களைச் சொல்லுவன. இவற்றுட் பல, குறைந்த நிலையிலுள்ளவர்களுக்கும் மிக்க நன்மை பயக்கக்கூடியவை.

புராணங்கள் கடவுளுடைய திருவருட்சிறப்பைச் சொல்லுவன; இவைகளைப் படிப்பதாற் சிவபத்தி வளரும். இவைகளிலே சமய உண்மைகளை விளக்குகின்ற பகுதிகளுமுண்டு. இவ்வுண்மைகள் தனியே சொல்லப்பட்டதால் வாசிக்கிறவர்கள் இலகுவாய் மறந்துவிடுவார்கள். அவை புராணக் கதைகளிலே வரும்போது மனசிலே நன்றாகப் பதிகின்றன. உதாரணமாக, எவருக்காகவாயினும் பொய் சொல்லல் ஆகாது என்பது ஒரு சமய உண்மை. இந்த உண்மை தனியே சொல்லப்பட்டால் இதை மறப்பது இலகுவாயிருக்கும். இதை அமைத்திருக்கும் இனிய ஒரு கதை இருந்தால் அது நினைவிலிருக்கும். கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியன புராணங்களிற் சிறந்தன. இவற்றிற் சில பகுதிகளுக்கு வெளிப்படைப் பொருள் கொள்ளலாகாது. சைவ இதிகாசங்கள் அடியார்களுடைய சரித்திரங்களைச் சொல்லுவன.

சைவ சமய மொன்றே நம்மைப் பிறவித்துன்பத்தினின்றும் நீக்கிக் கடவுளோடு சேர்க்கத்தக்கதென்று மேலே காட்டப்பட்டது. குழந்தைக்கு இவரே பிதா என்று காட்டுபவள் அந்தக் குழந்தையினுடைய தாய். அது போலக் குழந்தைகளாகிய நமக்குக் கடவுளைக் காட்டுவது நமது அருமையான சைவசமயமாகிய தாயாம். நம்மைப் பெற்ற தாயிலும் பார்க்க அதிகமாக இந்தத் தாயை நாம் நேசித்து இதை யாவரும் அறியச் செய்வது நம்முடைய கடனாகும்.

நமது நாட்டிலே நமது சமயம் பலவிதமான ஏதுக்களால் வருந்தியது. முன்னாளிலே நமது நாட்டை ஆண்டு வந்த பறங்கியர் முதலானவர்கள் சைவசமயமாகிய நமது தாயைப் பலவகையாலும் வருத்தினார்கள். இங்கிலிஷ் ராச்சியம் வந்த பின்பு அரசாட்சியாரால் துன்புறாமலிருந்தாலும், வேறு வழியாகப் பெருந்துன்பம் அடைந்தது. ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களிலுள்ளவர்கள் கிறிஸ்து சமயத்தை நாட்டுதற்காக மிஷனரிமாருக்குச் சம்பளங் கொடுத்து இவ்வூருக்கு அனுப்பியிருக்கிறார்கள். கிறிஸ்து சமயத்தை நாட்டுவது என்றாற் கருத்தென்ன? சைவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவது தானே. சைவர்கள் கிறிஸ்தவர்களானாற் சைவசமயத்தை அழிப்பதாக முடியுமல்லவா? எமது நாடு இப்போது எமது ஆட்சியில் வந்து விட்டபடியால் எமது சமயத்தை நாம் இலகுவாக வளர்க்கலாம்.

சைவப் பிள்ளைகளைச் சைவப் பள்ளிக்கூடங்களிற் படிக்கச் செய்ய வேண்டும். வேண்டிய இடங்களிற் சைவப் பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும். அப்பள்ளிக்கூடங்களிலே ஒவ்வொருநாளும் சைவசமயத்தைப் போதிக்க வேண்டும். முதியோர்களுக்குஞ் சைவப் பிர

சங்கஞ் செய்துவரல் வேண்டும். கோயில்களையும் பள்ளிக்கூடங்களையும் பிழையற நடத்துதல் வேண்டும். அவைகளை நடத்துபவர்கள் பொருள் வரவையும் மகிமையையும் நினையாமற் சைவசமயத்தை வளர்த்துச் சிறப்பிப்பதிலேயே நாட்டமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

## பிறவி எதற்கு

ஆன்மாக்கள் பலவகையான உடம்புகளை எடுக்கின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்திலே,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"

என்று கூறியருளினர்.

ஆன்மாக்கள் மனிதராகப் பிறக்கின்றன; மிருகங்களாகவும் பிறக்கின்றன; பட்சிகளாவும் பிறக்கின்றன; மரஞ்செடிகளாகவும் பிறக்கின்றன; தேவராகவும் பிறக்கின்றன; இன்னும் பலவகையாகப் பிறக்கின்றன. இவைகளுள், மரஞ்செடி முதலியவை முன் செய்த கர்மத்தின்பலனை அனுபவிப்பன. அவை அதிகமாகக் கர்மஞ் செய்வதில்லை. ஆதலால் அவைகளுக்கு ஆணவம் தீர்வுகுறைவு. மிருகம் பட்சி முதலியன கர்மம் செய்வன; ஆயினும் அவை இது நல்லது இது தீயது என்று பகுத்தறியமாட்டாமல் இருத்தலால் தங்களைத் திருத்திக் கொள்ள இயலாதன. மனிதப் பிறவியிலே ஆணவம் முதலிய பாசங்களிளின்றும் நீங்கி மோட்சம் அடைகிறதற்கு வேண்டும் வழிகளெல்லாம் இருக்கின்றன.

இந்த உலகத்திலும் வேறு உலகங்களிலும் கோடிக் கணக்கான பலவகைப்பட்ட பிறவிகள் உண்டு. இவ்வளவு பிறவிகளுள் மிக அரிதாகிய மனிதப்பிறவி நமக்குக் கிடைத்தது எவ்வளவு பெரிய பாக்கியம்! இவ்வளவு அருமையாக இந்த மனிதப் பிறவி நமக்குக் கிடைத்திருக்கிறபொழுது, இதனுல் நமக்கு வரக்கூடிய நன்மை ஒன்றையும் நாம் தவறவிடலாகாது. ஒவ்வொரு நிமிஷமும் இந்தப் பாசங்களை நீக்குதற்கு நாம் முயற்சி செய்தல் வேண்டும். நாம் மனித உடம்போடு இருக்கும் ஒவ்வொரு நிமிஷ நேரமும் கோடி பொன்னிலும் பார்க்க விலையுள்ளது. மனிதப் பிறவியுள்ளும், குருடராய் முடவராய்ச் செவிடராய்ப் பிறவாமல், இழிவான சமயங்களிற் பிறவாமல், மோட்சத்தைத் தந்து கடவுளோடு சேர்க்கத்தக்கதாகிய சைவசமயத்திலே நாம் பிறந்தது எல்லாவற்றிலும் பெரிய பாக்கியம். ஆதலாற் சைவர்களாகிய நாங்கள் மற்றைய மனிதரிலும் பார்க்க மிக அதிகமாகக் கடவுட்பத்தியுள்ளவர்களாய், உலக இன்பங்களை விரும்பாதவர்களாய், மோட்ச இன்பத்திலே கண்ணுள்ளவர்களாய், இடையறு நல்லொழுக்கமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

சைவபோதம் இரண்டாம் புத்தகம்.

---

## நமக்குள்ள சரீரங்கள்

நமக்குப் பல சரீரங்கள் உள்ளன. இரத்தம் தசை எலும்பு தோல் முதலியவற்றுல் ஆக்கப்பட்டதாய் நாம் காணுகிற சரீரம் ஒன்று இருக்கின்றது. இதற்குத் தூல சரீரம் என்று பெயர். இது தவிர மற்றும் இரண்டு சரீரங்களுண்டு. அவை சூக்கும சரீரமும் காரண சரீரமு

மாம். சூக்கும சரீரம் உணருதல் நினைத்தல் விரும்புதல் முதலிய உட்செய்கைகளைச் செய்தற்குக் கருவியாயுள்ளது. காரண சரீரம் கடவுளுடைய திருவருளினால் ஆன்மாவி னுடைய அறிவையும் தொழிலையும் விளக்கி ஆனந்தத் துக்குக் காரணமாயுள்ளது.

தூலசரீரத்திலே அன்னமயகோசம் பிராணமய கோசம் என்று இரண்டு பகுதி உண்டு. அன்னமய கோசம் வெளிப்பகுதி, பிராணமயகோசம் அன்னமய கோசத்தை ஒருவாறு இயக்குவது; இயக்குவதால் பிராண மயம் என்னும் பெயரைப் பெறும். சூக்குமசரீரத்துக்கு விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்று இரண்டு பகுதிகளுண்டு. விஞ்ஞானமயகோசம் ஞானத்தைக் கொடுப்பது. ஆனந்தமயகோசம் ஆனந்தத்தைக் கொடுப் பது. ஆகவே மூன்று சரீரங்களும் ஐந்து கோசங்களாக உள்ளன. ஒருவன் இறக்கும்போது முதல் இறப்பது அன்னமயகோசம். பின்பு இறப்பது பிராணமயகோசம். மற்றவைகள் அழிவதில்லை. அவை சர்வசங்காரத்தில் அல் லது முத்திநிலையில் அழியும்.

தூலசரீரம் நீங்கிய பின்பு சில ஆன்மாக்கள் சூக்கும சரீரந்திரிந்த வேறு சரீரத்தோடு இன்பத்தை அல்லது துன்பத்தை அநுபவித்துக் கொண்டிருப்பதுண்டு இன் பத்தை அநுபவிக்கும்போது சூக்குமசரீரம் பூதசாரசரீர மாகின்றது; துன்பத்தை அநுபவிக்கும்போது யாதனு சரீரமாகின்றது. புண்ணியஞ் செய்த ஆன்மா இன்பத்தை அநுபவிக்கும். இன்பத்தை அநுபவிக்கும் நிலைக்குச் சுவர்க்கமென்று பெயர். துன்பத்தை அநுபவிக்கும் நிலைக்கு நரகம் என்று பெயர். இப்படி அநுபவித்த பின்பு ஆன்மாவானது பிறவியை எடுக்கின்றது. அந்தப் பிறவிக்கு வேண்டிய தூலசரீரம் சூக்கும சரீரத்தைச்

சார்ந்து உண்டாகின்றது. நாம் ஒரு விளாமரத்தை வெட்டினால், பின்பு அதனுடைய வேரிலிருந்து ஒரு மரம் முளைக்கின்றது. அது போலத் தூலதேகம் அழிந்த பின்னர், சூக்கும தேகத்தைச் சார்ந்து வேறு தூலதேகம் உண்டாகின்றது. சில ஆன்மாக்கள் சும்மாவிருந்து விட்டுப் பிறவியை எடுக்கும். சில ஆன்மாக்கள் உடனே பிறவியை எடுப்பதுமுண்டு.

குறிப்பு:- "மனித சரீரம் எடுத்த ஆன்மா மிருக சரீரத்தை எடுக்குமா?" என்று கேட்கக்கூடும். எடுக்க மாட்டாது என்று சிலர் எண்ணுகிறார்கள். இது பிழையான எண்ணம். அது எடாது என்பதற்கு அவர்கள் சொல்லுகிற நியாயம் என்னவென்றால், "ஆன்மா வரவர நயப்படுகின்றது. ஆன்மா நயப்படுவதற்கு அடையாளம் அதனுடைய சரீரம் நயப்படுதல். மிருக சரீரம மனித சரீரத்திலும் நயந்ததன்று. ஆதலால் மனித சரீரம் எடுத்த ஆன்மா மிருக சரீரம் எடுக்கமாட்டாது" என்பதே. இவர்களுடைய நியாயத்திலே பிழை எதுவென்றால், "ஆன்ம நயத்துக்குச் சரீரநயம் அடையாளம்" என்பது. சரீர நயத்துக்கும் ஆன்ம நயத்துக்கும் தொடர்பு இல்லை. ஆன்ம நயம் குணத்தினாலே விளங்கும். கொடிய தீயரான மனிதரிலும் பார்க்க நற்குணமுள்ளதாகிய பசு மேலான ஆன்மா. மனிதருக்குள்ளும் நல்ல சரீரமும் விவேகமுமுள்ளவர்கள் தீயவர்களாய் இருக்கிறார்கள். மெலிந்த சரீரமும் விவேகக்குறைவுமுள்ளவர்கள் அநேகர் நற்குணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். நற்குணமுள்ளவர்கள் உயர்ந்த ஆன்மாக்கள். ஆதலால் சரீரம் குறைவாய் இருத்தலினாலே ஆன்மாவும் தாழ்ந்ததாய் இருத்தல் வேண்டுமென்ற எண்ணம் பிழை. மனித சரீரம் எடுத்த ஆன்மா எந்தச் சரீரமும் எடுக்க

லாம். அப்படி எடுக்கக் கூடுமாதலினாலேதான் அப்பர் சுவாமிகள்,

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி
யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரல் வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா
திருப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே."

என்று சொல்லியருளினார்.

## வினைகள்

ஆணவத்தின் முயற்சியினாலே நான் இராமன் மேற் கோபங் கொள்ளுகிறேன். இராமன் என்மேற் கோபங் கொள்ளுகிறான். இராமனில்லாவிட்டால் எனக்கு அந்தக் கோபம் உண்டாகாது. உண்டாகாமையால் ஆணவம் முயற்சி செய்ய இயலாது. ஆதலால் என்னிலிருக்கும் ஆணவம் முயற்சி செய்தற்காகவே கடவுள் இராமனைப் படைத்தார் என்று சிலர் சொல்லக்கூடும். இந்த எண்ணம் மிகப் பிழையானதென்பது மற்றைப்பக்கத்தைப் பார்க்கும்போது இலகுவாக விளங்கும். இராமனும் என் மேற் கோபிக்கிறான்; அப்படியானால் இராமனுக்காகக் கடவுள் என்னைப் படைத்திருத்தல் வேண்டும்; இராமன் எனக்காகப் படைக்கப்பட்டானென்பதும், இராமனுக்காக நான் படைக்கப்பட்டேனென்பதும் ஒன்றுக் கொன்று மாறானவை. ஒருவருக்காக மற்றொருவர் படைக்கப்படவில்லை. இங்ஙனமே உலகத்திலேயுள்ள எல்லா உயிர்களுமே அவைஅவை ஈடேறுதற்காகப் படைக்கப் பட்டவையேயன்றி ஒன்றுக்காக மற்றொன்று படைக்கப்

படவில்லை. ஆயினும் அவை தத்தம் முயற்சிகளைச் செய்யும்போது, ஒன்றோடொன்று தொடர்பு பூண்டே செய்ய வேண்டுவனவாயிருக்கின்றன.

வினையானது மனம், மொழி, மெய் என்னும் மூன்றின் வழியாகச் செய்யப்படும். களவு செய்யவேண்டுமென்று எண்ணுதல் மனத்தினாற் செய்யப்படும்வினை. களவு செய்யும்படி ஒருவனை ஏவுதல் மொழியினாற் செய்யப்படும்வினை. களவு செய்தல் மெய்யினாற் செய்யப்படும்வினை.

ஒருவன் என்னை ஏசுகிறான்; அப்போது, "என்னை இவன் ஏசலாமா? நான் இவனுக்கு அடிக்க வேண்டும்" என்ற தீய எண்ணம் ஆணவத்தின் முயற்சியினால் உண்டாகிறது. அந்த எண்ணத்தை அடக்காவிட்டால் நமக்கு எத்தனையோ தீமைகள் உண்டாகும்.

முதலாவது:- நான் அவனுக்கு அடித்தால் அவன் எனக்கு அடிப்பான்; நமக்குக் கோபம் உண்டாகும்; கோபத்தினாலே கொலை முதலான பெரும் பிழைகள் செய்யவேண்டி நேரிடும். இரண்டாவது:- இன்றைக்கு என்னுடைய கோபம் ஒருவனிலே பலித்ததானால், நாளைக்குக் கோபம் இரண்டு பங்காகவரும். ஆணவத்துக்கு இடங்கொடுத்தால் அது ஆன்மாவை நல்லவழியிற் செல்லவிடாது. மூன்றாவது:- கெட்ட செய்கைகள் அதிகமாகச் செய்து வந்தால், அந்தப் பழக்கமே கெட்ட செய்கையைப் பின்னுஞ் செய்விக்கும். நாம் பிழையென்று நினைத்தாலும் நம்முடைய சொல்லுக்கமையாமற் சரீரம் செய்துவிடும். நமது நண்பர் ஒருவர் மாமிசஞ் சாப்பிடுதல் பாவச் செய்கையென்று நன்றாக உணர்ந்து அதை விடவேண்டுமென்று தீர்மானித்தார். வீட்டிலே அது சமைக்கக் கூடாதென்று கட்டளையிட்டார். ஆயினும், அவருடைய நண்பரொருவர் அவரையும் வேறு சிலரையும்

ஒருநாள் விருந்துக்கழைத்தார்; அங்கே மாமிசபோசனமும் தாவரபோசனமும் வெவ்வேறிடத்திலே வைக்கப்பட்டிருந்தன; இவர் மாமிசத்தைக் கண்டவுடனே வாயூறித் தம்முடைய தீர்மானத்தைப் பொருட்படுத்தாமல் மாமிசத்தையுண்டார். "நீங்கள் ஏன் இந்த வேலையைச் செய்தீர்கள்?" என்று அவருடைய சிநேகிதர் கேட்டபொழுது, "வாய் சொல்வழி கேளாதாம்" என்று மறுமொழி சொன்னார். இப்படியாகச் சிலர் ஒரு செய்கையைப் பலமுறை செய்வதினால், அவர்களுடைய சரீரம் அவர்களுடைய சொல்லைக் கேளாமல் வழக்கப்படி நடப்பதுண்டு. இயல்பாக மனம் தலைவனும், சரீரம் அடிமையுமாய் உள்ளன. ஒரு பழக்கத்தைப் பழகிவிட்டால் சில காலங்களிலே சரீரம் தலைவனாயும் மனம் அடிமையாயும் மாறிவிடுகின்றன. நாலாவது:- தீவினை செய்தவர்கள் அதற்காக இந்தப் பிறவியிலும் நரகங்களிலும் அடுத்த பிறவிகளிலும் வருந்துவார்கள். நெருப்பிலே கை வைத்தவனுக்குக் கை புண்ணாவது நிச்சயமாவதுபோல, தீவினை செய்தவர்களுக்குப் பல்வகையான துன்பங்கள் உண்டாவது நிச்சயம்.

இப்படியல்லாமல், கோபம் வந்தபோது கோபத்தை அடக்கினால் மனத்திற்குச் சஞ்சலமில்லை. பின்னொரு முறை கோபம் வருகிறபொழுது அதை அடக்குவது இதிலும் பார்க்க எளிதாயிருக்கும்; ஆணவம் வலிகுறையும், நாம் கோபத்தை அடக்கிவிட்டோமென்று ஒரு மகிழ்ச்சியுண்டாகும்; ஆன்மாவானது ஈடேறும், நல்வினையினால் இவ்வளவு நன்மைகளெல்லாமிருக்கவும், தீவினை செய்யப் புகுதல் பைத்தியச் செயலல்லவா?

இந்த நல்வினை தீவினைகளைக் கன்மம் என்று சொல்லுவர். ஒருவன் முற்பிறவிகளிலே நற்கன்மம் செய்திருந்

தால், இந்தப் பிறவியிலே அதற்குப் பலனாகிய இன்பத்தை அநுபவித்தற்கு மிகுந்த பொருள் கிடைக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அவன் அந்தப் பொருளை மதுபானஞ் செய்தல் பிறருக்குத் தீங்கு செய்தல் முதலிய தீயகருமங்களிற் செலவு செய்கிறான், அல்லது ஏழையவர்களுக்குக் கொடுத்து நல்ல கருமங்களைச் செய்து செலவிடுகிறான்; ஆகவே. முன்னே செய்த நற்கருமத்தின் பலனாகிய பொருளை அனுபவிக்கும்போது, மேலும் மேலும் நல்வினை தீவினை செய்கிறான். ஆகவே, பழைய வினையின் பயனை அனுபவிக்கும்போது புதிதாகவும் வினை செய்கிறான். அனுபவிக்கப்படுகிற வினைக்குப் பிராரத்தம் என்று பெயர். அனுபவிக்கும்போது செய்யப்படும் புதிய வினைக்கு ஆகாமியம் என்று பெயர். அனுபவிக்கப்படாமல் எஞ்சியிருக்கிற வினைக்குச் சஞ்சிதம் என்று பெயர். பிராரத்தம் எடுத்த இப்பிறவியிலே அனுபவிக்கப்படும் வினை.

ஒரு மாடு தாகத்தினால் தவிக்கும்போது ஒருவன் அதற்குத் தண்ணீர் கொடுக்கிறான். அவன் அந்தச் செய்கையை "நான் செய்கிறேன்" என்ற எண்ணத்தோடு செய்தால், நல்வினையாகி, அவனுக்கு இன்பமாகிய பலனைக் கொடுக்கும். அதற்காக அவன் சில காலம் மறுமையிலே இன்பம் அனுபவிக்க நேரிடும். அவன் "நான் செய்கிறேன்" என்று எண்ணாமல் கடவுளுடைய திருவருள் செய்விக்கிறதென்று அந்தச் செய்கையைக் கடவுளுக்கு ஒப்புவித்துவிட்டால், அது நிலையற்ற உலக இன்பமாகிய பலனைத் தராமல், நிலையானதாகிய மோட்சத்துக்கு அவனைத் தகுதியுள்ளவனாக்கும். இப்படியான வினை நல்வினைகளுள்ளே மிகவும் மேலானது. இது பற்றில்லாத வினை எனப்படும்.

வெறுவினை யென்றொருவகை வினையுமுண்டு. இது நல்வினை தீவினைகளிலே சேராதது. நூல் நூற்றல், கல் வெட்டுதல் முதலியவை வெறுவினைகளாம்.

ஆகவே, வினைகள் : பசுநல்வினை, பசுத்தீவினை, சிவ நல்வினை, சிவத்தீவினை, பற்றில்லாத வினை, வெறுவினை என அறுவகைப்படும்.

## எது விதி

இன்னது செய்தால் இன்னது வருமென்பது விதி. நன்மை செய்தால் இன்பம் உண்டாகும். தீமை செய் தால் துன்பம் உண்டாகும். முயற்சி செய்தால் அதற் குத்தக்க பலன் உண்டாகும். இவை விதிகளாம். இந்த விதிகள் சிவபெருமானுடைய இச்சாசத்தியினாலே நிறை வேற்றப்படுகின்றன.

நாம் இப்பொழுது அனுபவிக்கும் இன்ப துன்பங் களின் ஒரு பகுதி ஊழின் பலன். மற்றொரு பகுதி நாம் இப்போது செய்யும் முயற்சியின் பலன். ஊழின் பலன் துன்பமாயிருந்தால் நாம் இப் போது செய்யும் நல்ல முயற்சியின் பலனை அது குறைக்கும். அதன் பலன் நல்லதாக இருந்தால், நாம் இப்போது அற்பமுயற்சி செய்தாலும் அதிக பல னைத் தரும். ஒருவன் முன்னே கடன்காரனாயிருந்தால், இப்போது அவன் பொருளைச் சம்பாதித்தாலும், செல்வனா யிருத்தல் இயலாது. ஏனென்றால், இப்போது சம்பா திப்பதின் ஒரு பகுதி பழைய கடனுக்குப் போய்விடும். "சம்பாத்தியம் கடனுக்குப் போகின்றதே! நான் செல்வனாயிருக்க முடியவில்லையே! நான் இப்பொழுது பாடுபட்டுப் பொருள் சம்பாதிப்பதினாற் பயனென்ன?"

என்று ஒருவன் சும்மா இருந்தால், இவனுடைய கடன் குறையாமல் எப்போதும் இவன் கடன்காரனுயேயிருப் பான். எவ்வளவு அதிகம் பொருள் சம்பாதிக்கிருனே அவ்வளவு அதிகம் அவனுடைய கடன் குறையும். பின்னர்ச் செல்வனுயும் வரலாம். அதுபோல, ஊழினுல் வருந்து கிறவன் முயற்சி செய்யாமலிருந்தால், மிக அதிகம் வருந்துவான். முயற்சி செய்தால் அதற்குத் தக்கதாக வருத்தங்குறையும், ஆதலால், ஊழ் தன்னுடைய முயற்சி யைச் செய்ய, நாம் நம்முடைய முயற்சியைச் செய்ய வேண்டும். ஊழ் தன்னுடைய பலனைத்தரும்; தற்கால முயற்சியும் தன்னுடைய பலனைத்தரும்; இதுவே விதி. நமக்கு இப்போது வரும் இன்ப துன்பங்களெல்லாம் ஊழினுல் மாத்திரம் வருமென்பது விதியன்று, அநேகர் விதி இன்னதென்று விளங்காமல் முயற்சி செய்யாமல் வீணர்களாகிவந்துகின்ருர்கள்.

ஒருவன் செய்த கன்மத்தின் பலனை அவனே அனுப வித்தல் வேண்டும். எனக்காக வேருெருவர் கடவுளை வணங்குவதினுல் எனக்குப் பலனில்லை. அந்தப் பலன் அவருக்குத்தான் உள்ளது. நான் ஒரு பாவஞ் செய்தே னென்று வைத்துக் கொள்வோம். அந்தப் பாவத்தி னுலே எனக்கொரு கொடிய வியாதி வந்தது. வியாதியை நீக்குதற்காக வேருெரு ஆன்மாவை பலியிட்டு வருத்துவது பெரும் பைத்தியம். இது உடம்பிலே இருக்கிற அழுக்கை நீக்குதற்காக குளிக்கிறதற்கென்று குளத்துக்குப் போன ஒருவன், அங்கேயுள்ள சேற்றை யள்ளிச் சரீரம் முழுதும் பூசிக்கொண்டுவருவது போலா கும். வருத்தம் வந்தால், ஆடுவெட்டுவேன் என்று நேரு வது இப்படியான ஒரு பைத்தியம்; ஆடும் நம்மைப் போன்ற ஒரு ஆன்மாதானே. நான் செய்த கன்மத்

தின் பலனை அது ஏன் அனுவிப்பதாகும். முன்னே செய்த பாவம் போதாமல், அந்த ஆட்டை வெட்டும் பாவத்தையும் சேர்த்துக் கொள்வதுதான் இந்த மதியீனர் களுடைய செய்கை.

## சிவபெருமான் திருவுருவம் கொள்வதேன்

சிவபெருமான் உருவமில்லாதவராயினும், அவர் ஆன் மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்தற்காக, அவருடைய திருவருள் உருவமெடுத்து வருதலுமுண்டு. தன் பங் குக்கரையை அடைப்பவரின்றி வருந்திய செம்மனச்செல் விக்குக் கூலியாள்போல உருவங்கொண்டு வந்ததும், பிர சவ வேதனையினால் வருந்திய பெண்ணுக்கு அவளுடைய தாய்போல வந்து உதவி புரிந்தும், அப்பர் சுவாமிக்குப் பொதிசோறு கொடுத்ததும் சிவபெருமானுடைய திரு வருளேயாம். சிவபெருமானுடைய திருவருள் அடியவர் களுக்கு உதவி செய்யும்படி வேறும் பலவித உருவங் கொண்டு வந்ததாக இன்னும் அநேக சரித்திரங்களுண்டு. அந்த உருவங்கள் எங்களுடைய உருவங்கள் போன்றவை யல்ல. எங்களுடைய உருவம் தசை எலும்பு முதலிய அசுத்தமாயைப் பொருள்களால் உண்டாக்கப்பட்ட அசுத்த தேகம்.

பலவகைப்பட்ட பிறசமயங்களிற் பலவிதத் தெய்வ வழிபாடுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு சமயத் திலே, தெய்வம் மிருகபலி மதுபானம் முதலியவற்றில் விருப்பமுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அத் தெய்வத்தை வழிபடுகிறவர்கள் மிருகபலி குடிவகை முதலியவைகளை நிவேதிப்பது அத்தெய்வத்துக்குப் பிரிய மாய் இருக்குமென்று எண்ணுகிறார்கள். அதனாலே ஆடு கோழி முதலிய பிராணிகளை அவை கதறக் கதற வெட்

டிப்படைப்பது பாவமென்று அவர்கள் நினைக்கிறதில்லை. அவைகளை வெட்டும்பொழுது அவை படும் பாட்டைக் கண்டும் அவர்களுடைய மனம் உருகுவதில்லை.

கள் முதலிய குடிவகைகளைக் கடவுளுக்கு அவர்கள் நிவேதிப்பதினாலே அவைகளைத் தாமும் பருகுதலை விலக்கமாட்டார்கள். தமது தெய்வம் மது மாமிசத்தை ஏற்றுக் கொள்ளும்பொழுது, அவருடைய அடிமைகளாகிய தாம் அவைகளை அருவருத்துத் தள்ளுவது குற்றமாகும் என்று நினைத்து மாமிச போசனஞ் செய்யவும் மதுபானம் பண்ணவும் ஏவப்படுகின்றார்கள். தெய்வத்துக்கு மிருகபலியும் மதுபானமும் உவப்பானவை என்று சொல்லும் சமயங்களில் இவர்கள் நின்று கடவுள் வழிபாடு செய்வதனாலே இவர்கள் ஈடேறுவதற்கு அவசியமான சீவகாருண்ணிய குணமில்லாது வன்னெஞ்சராய், மதுபானிகளாய் இவற்றால் இன்னும் பல பாவங்களைச் செய்து உலகின்றார்கள்.

இப்படியே கொலை, புலாலுண்ணல், மதுபானஞ் செய்தலாகிய செயல்களைப் பாவமென்று விலக்காத சமயத்தவர்கள் இவைகளைத் தாங்கள் விலக்காது செய்கின்றமையாற் பாவிகளாகின்றார்கள். தெய்வங்கள், பலி கொடாவிட்டால், தங்களைப் பலி எடுத்துப் பழிவாங்குமென்று நினைக்கிறவர்களுமுண்டு. இவர்கள் கடவுளைப் பயத்தினால் வழிபடுகிறார்கள். சிறு பிள்ளைகளுக்குப் பேய் பூதங்களில் எப்படி மெய்யன்பு உண்டாவதில்லையோ, அப்படியே இவர்களுக்கும் தங்கள் தெய்வத்தில் உண்மையான அன்பு உண்டாவதில்லை. இதனால் இவர்கள் கடவுளிடத்துக் "கற்றாவின் மனம்போலக் கசிந்துருகும்" மெய்யன்பைப் பெறும் பாக்கியம் இல்லாதவர்களாகின்றார்கள். இவைகளை உற்று நோக்கும்பொழுது "நாம் எந்தச் சமயத்

தில் நின்று எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் சரி தானே" என்று நினைப்பது மூடத்தனமென்பது வெளியாகின்றது.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனுர்தாம் வருவர்"

என்று சொல்லப்பட்டிருத்தலால், மற்றைய தெய்வங்களை வழிபடுவோர் தமது வழிபாட்டின் அளவுக்குத்தக்க பலனை அடைந்தாலும், அச்சமயங்களில் விதிக்கப்பட்ட தீவினைகளைச் செய்து வருந்தி உண்மையை அறியாது இடர்ப்படுவர் ஆதலாற்றான்,

"காண்பவன் சிவனேயானுல் அவனடிக் கன்புசெய்கை
மாண்பறம் அரன்றன் பாதம் மறந்துசெய் அறங்க
ளெல்லாம், வீண் செயல்"

என்று மேலே காட்டிய செய்யுளுக்கு மூன்றும் செய்யுளில் ஆசிரியர் கூறினர். ஆதலால் ஒருவன் கடவுளைப் பற்றியும், கடவுள் வழிபாட்டைப் பற்றியும், பாவ புண்ணியங்களைப் பற்றியும் எள்ளளவும் தவறில்லாமல் சொல்லும் மெய்ச்சமயமாகிய சைவசமயத்தைக் கைக்கொண்டு, அச்சமய நூலின்படி கடவுளை வழிபட்டாலன்றிக் கடவுள் வழிபாட்டின் சரியான பலனை அடைய மாட்டான்.

## குரு சீடன்

மூர்த்தங்கள் நாம் கடவுளை வழிபடுதற்காக அவரால் விதிக்கப்பட்டவையாம். இவற்றைப் பற்றிய வேறு சில உண்மைகள் ஒரு குருவுக்கும் சிஷ்யனுக்கும் நடந்த சம்பாஷணையாகக் கீழே காட்டப்படுகின்றன.

சிஷ்யன் :- கோயிலிலே காணப்படும் இந்தத் திருவுருவங்கள் கடவுளா? அல்லது கடவுளுடைய அடையாளங்களா ?

குரு :- அந்தத் திருவுருவங்கள் அடையாளங்களல்ல, அவை கடவுளேயாம். ஏனென்றால், கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றார். ஆதலாலே அந்தத் திருவுருவங்களிலும் நிறைந்திருக்கின்றார். ஆதலால் அவை கடவுளேயாம்.

சிஷ் :- தெருவிலே ஒரு கல்லை அல்லது மரத்தைக் கடவுளென்று கும்பிடலாமா? அவைகளிலும் கடவுள் நிறைந்திருக்கிறார் தானே.

குரு :- நமக்குப் பிரியமானால் அவைகளையும் கும்பிடலாம். கோயிலிலுள்ள திருவுருவங்களிலே கடவுளுடைய தன்மைகளைக் காட்டும் அறிகுறிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை தியானத்துக்கும் வணக்கத்துக்கும் பெருந்துணையாய் உள்ளவை. இந்த அறிகுறிகள் தெருவிலே கிடக்கிற கல்லிலும் மரத்திலும் இருக்கின்றனவா? இந்தத் திருவுருவங்களிலே கடவுளுடைய மந்திரரூபம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் இந்தத் திருவுருவங்களை வழிபடுதல் கடவுளால் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் இந்தத்திருவுருவங்களை வழிபடுதல் கடவுளை வழிபடுதலாம்.

சிஷ் :- அறிவாலே கூடினவர்களும் கோயிலுக்குப் போக வேண்டுமா ?

குரு :- எவரும் கோயிலுக்குப் போக வேண்டுவதே மாணிக்கவாசக சுவாமிகள், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முதலாயினோர் அறிவாலே கூடினவர் அல்

லரோ? அவர்கள் எப்போதாவது கோயிலுக்குப் போகாமல் இருந்தார்களா? எந்த ஞானிகளும் கோயிலை விலக்க மாட்டார்கள்.

சிஷ் :- சிலர் "மனந்தானே கோயில்; மனத்திலே கடவுளைக் கும்பிட்டாற் போதாதா?" என்று சொல்லு கிறார்கள்; அது சரிதானா?

குரு :- கடவுளை வணங்குவதிலே விருப்பமில்லாதவர்கள் மாத்திரம் இப்படிப் பேசுவதை நான் கேட்டிருக்கி றேன். சிவபத்தியுள்ளவர் ஒருவரும் இப்படிச் சொல்ல மாட்டார். மனசிலே கும்பிடுவதெப்படி?

சிஷ் :- கடவுளை ஓர் உருவம்போல நினைத்துக் கும்பிட லாம்.

குரு :- கோயில்களிலுள்ள திருவுருவங்களுக்கு இருக் கின்ற மகிமை ஒன்று அந்த உருவத்துக்கில்லையே. அன்றியும், மனத்திலே உருவம் உண்டாக்கிக் கும்பிடு வதிலும் பார்க்க, கண்ணாலே காணும் ரூபத்தைப் பார்த்துக் கும்பிடுவது இலகு. ஒரு பெரிய கணக்கை மனத்தாலே செய்வதிலும் பார்க்க, அதிலுள்ள எண் களை ஒன்றிலே எழுதிச் செய்வது எவ்வளவு இலகு. ஆதலால், கோயிலிலுள்ள திருவுருவங்களை வணங்கு வதே உத்தமம். கோயிலுக்குப் போக இயலாத காலங்களிலே மந்திர வடிவமைக்கப்பட்ட அந்தத் திரு வுருவங்களை நினைத்து நாங்கள் கும்பிடலாம்.

சிஷ் :- வேறெதை நாம் வணங்கலாம்?

குரு :- சிவனடியார்களையும், திருநீற்றையும், உருத்தி ராக்கத்தையும், பஞ்சாக்கரத்தையும் சிவபெருமான் என்று நாம் வணங்கலாம்.

சிஷ் :- சிவனடியார் என்பவர் யார்?

குரு :- சிவனிடத்திலே மெய்யன்பு நிறைந்தவர்கள் சிவனடியார்களாம். மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், சண்டேசுரர் முதலிய நாயன்மாரும், அகத்தியர், ததீசி முதலிய முனிவர்களும், பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களும், மெய்கண்டதேவர் முதலிய ஞான நூலாசிரியர்களும் சிவனடியார்களுட் பிரசித்தி பெற்றவர்கள்.

## கோயில் வழிபாடு

கோயிலுக்குப் போனால் வேடிக்கைகளை விரும்பாமற் சிவவழிபாட்டிலேயே மனத்தைச் செலுத்தல் வேண்டும். இந்த ஊரிலே வருஷத்துக்கு இரண்டு முறை பெரிய நீதிபதி விசாரணைக்கு வருகிறார். அங்கே நாம் நிற்கும்பொழுது எவ்வளவு அமைதியாயும் பயபத்தியாயும் நிற்கிறோம்; இருமல் வந்தாலும் அடக்கிவிடுகிறோம். நீதிபதிக்கு முன்னே இவ்வளவு பயபத்தியாய் நின்றால் நமது சக்கரவர்த்திக்கு முன் எப்படி நிற்போம்? அப்படியானால், கடவுள் சந்நிதானத்திலே நாம் எப்படி நிற்க வேண்டும்? நமது சக்கரவர்த்திக்கு இந்தப் பூமியில் ஒரு சிறு பகுதிதானுண்டு. இந்தப் பூமி முழுவதும் அவருக்கிருந்தால் அவர் எவ்வளவு பெரியவராயிருப்பார். இந்தப் பூமியிலும் சூரியன் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரிது. சூரியனிலும் ஆயிரம் மடங்கு பெரிய நட்சத்திரங்கள் கோடானுகோடி உள்ளன. இவை எல்லாவற்றையும் உண்டாக்கிய சிவபெருமான் எவ்வளவு பெரியவர் என்பதை யோசித்துப் பாருங்கள்! உண்டாக்கியது எப்படி? உண்டாக்க வேண்டுமென்று அவர் நினைக்கவுமில்லை; அவர் சும்மா இருக்க அவரது சத்தியால் எல்

லாம் உண்டாகின்றன. இப்படியானல் சிவபெருமானுடைய பெருமை எவ்வளவு? பெரிய நீதிபதிக்கு முன்னே நிற்கும்போது இருமல் வந்தாலும் அடக்கிக் கொண்டு பயபத்தியாய் நிற்றல் வேண்டுமானல், சிவபெருமானுடைய சந்நிதானத்திலே நாம் எவ்வளவு பயபத்தியாய் நிற்றல் வேண்டும்? கோயிலுக்குப் போகிறவர்கள் இயன்ற அளவு தொண்டு செய்வது உத்தமம். குடை பிடித்தல், தீவர்த்தி பிடித்தல், வாகனங் காவுதல், பூந்தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுதல், கூட்டுதல், மெழுகுதல் முதலிய திருத்தொண்டுகளில் ஒன்றுவது செய்தல் வேண்டும்.

சில கோயில்களிலே நிகழும் திருவிழாக்களில் மூன்று பெருங் கொடும் பாதகங்கள் செய்யப்படுகின்றன; கடவுளிடத்து அன்புடையவர்கள் அப்படியான விழாக்கள் நடைபெறும்போது அந்த இடங்களுக்குப் போகலாகாது. போகிறவர்கள் அந்தப் பாதகங்களுக்கு உடன்பட்டவராய்த் தாமும் பாதகர்களாவார்கள்.

அவற்றுள் மிகக் கொடிய பாதகம் சுவாமியுடைய திருமேனியிலே பொய்க் கரங்களையும் பொய்க் கால்களையும் கட்டுதலாம். இவைகளைச் சுவாமியின் மேலே கயிற்றினல் வரிந்து இறுக்கிக் கட்டுதல் எவ்வளவு கொடிய சிவத் துரோகமாகும். அதைச் சுவாமியென்று நினைப்பவர்கள் இந்தக் கொடிய வேலையைச் செய்வார்களா? இப்படியான பொய்க் கைகளையும் கால்களையும் எங்களுடைய உடம்பிலே யாராயினும் கட்டுதற்கு வந்தால் நாங்கள் விடுவோமா? சுவாமியை ஒரு பாவைப்பிள்ளையென்று நினைப்பவர் மாத்திரம் அஞ்சாமல் இப்படியான செயல்களைச் செய்வார். சுவாமியைப் பாவைப்பிள்ளையாக நினைத்தல் சுவாமியை எவ்வளவு நிந்திப்பதாக முடியும்?

இரண்டாவதான கொடிய பாதகம் யாதெனில், கோயிலிலே பெண்களைக்கொண்டு நடனம் செய்வித்தலாம். கோயிலுக்குப் போகிறவர்கள் கடவுளை வணங்குதலைக் கைவிட்டு இவர்களுடைய நடனத்தைப் பார்ப்பார்களாயின், அவர்கள் இந்தப் பெண்களைக் கடவுளிலும் மேலாக மதிப்பவர்களாகின்றனர். இப்படியாகக் கடவுளை அவமதித்தல் பெருஞ் சிவத்துரோகமேயாம்.

மூன்றாவதான சிவத்துரோகம் அர்த்தயாம காலத்தின் பின் பூசை திருவிழா முதலியவற்றை நடத்துதலும் தரிசித்தலுமாம். சில இடங்களிலே சூரியோதயத்தின் பின்னரே விழா முடிகின்றது. இது சிவாகம விதிக்கு முழு மாறான செய்கை. கடவுளிடத்து அன்புடையவர்கள் அர்த்தயாம காலம் சென்றவுடனே கோயிலை விட்டுப் புறப்படுதல் வேண்டும். சிவராத்திரியில் மாத்திரம் நான்கு யாமங்களிலும் சுவாமி தரிசனம் செய்தல் தக்கதாம்.

## நித்திய கருமம்

விடிவதற்கு முன் நித்திரைவிட்டெழுதல் வேண்டும். எழும்போது "சிவ சிவ" என்று சொல்லிக் கடவுளைத் தியானித்தல் வேண்டும். பின்பு கைகால் கழுவித் திருநீறு பூசிக் கடவுளைத் தோத்திரம் பண்ணல் வேண்டும். அவசிய கருமம் முடித்துப் பல் விளக்கிய பின்பு முகங் கழுவி விபூதி தரித்துச் சிவபெருமானைத் தியானித்தல் வேண்டும். சீலை முதலியவைகளைத் தோய்த்துவிட்டு ஸ்நானஞ் செய்யப் புகும்பொழுது சிவபெருமானை வணங்கித் தண்ணீரைச் சிவசத்தி என்று பாவித்து அதனாலே சரீரத்தையும் மனத்தையும் சுத்தம் பண்ணுவதாகப் பாவித்தல் வேண்டும். பின்பு விபூதி தரித்துக்கொண்டு சிவத்தியானஞ் செய்தல் வேண்டும். தீக்ஷை பெற்றவர்கள்

சந்தியாவந்தனஞ் செய்தல் வேண்டும். அதன்பின் கோயி லுக்குப் போய் வருவது நல்லது. உண்ணத் தொடங்கு முன் சிவபெருமானைத் தியானித்து அவருக்கு நிவேதனஞ் செய்தல் வேண்டும். நிவேதிக்கும்பொழுது நம்மையும் அவருக்கு ஒப்புக் கொடுத்ததாகப் பாவித்தல் வேண்டும். படைத்த சாதத்தின் ஒரு பகுதியைக் காகம் முதலிய பிராணிகளுக்காக எடுத்து வைத்தல் வேண்டும். உண் ணும்போது அவசியமில்லாத பேச்சுப் பேசாமற் சிவ பெருமானை நினைத்தல் வேண்டும். உண்டல் முடிந்த பிறகு விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்தல் வேண் டும். வீட்டைவிட்டு வெளியே போகும்போது விபூதி தரித்தல் வேண்டும். விபூதி தரிக்கும்போதெல்லாம் சிவ பெருமானைத் தியானித்தல் வேண்டும். வழியிலே கோயில் களைக் கண்டாற் கும்பிட்டுக்கொண்டு போதல் வேண் டும். கோயிலிலே அடிக்கப்படுகிற மணிச் சத்தங் கேட் கும்போதெல்லாம், கடவுளைத் தியானித்தல் வேண்டும். நம்முடைய வேலைகள் செய்து முடிந்தபின் வீண் கதைகள் பேசப் போகாமற் கடவுளைத் தியானித்தல் வேண்டும். அன்றேல் தேவாரம், திருவாசகம், சிவனடியார் சரித் திரம் முதலிய பக்தி நூல்களை அல்லது ஞானசாஸ் திரங்களை வாசித்தல் வேண்டும். அன்றேல் அவைகளைப் பற்றிப் பேசல் வேண்டும். நித்திரைக்குப் போகுமுன் விபூதி பூசல் வேண்டும்.

இப்படிச் செய்துவந்தால், ஆன்மாவைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் உள்ள எண்ணம் அதிகமாக வரும்; உலக இன்பங்களைப் பற்றிய எண்ணம் அதிகம் வராது. சிவ பக்தியினாலும் நல்லொழுக்கத்தினாலும் ஆன்மா ஈடேற்றமடையும். நாம் பிறவி எடுத்த பலனை அடைந் தவராவோம்.

## மனித சரீரத்தின் அமைப்புக்கு மாமிச போசனம் பொருந்தாது

கடவுள் மூன்று வகையான உயிர்களைப் படைத்திருக்கிறார். அவற்றுள் ஒருவகை உயிர்கள் மாமிசஞ் சாப்பிடத்தக்க சரீர அமைப்பை உடையவை. வேறொரு வகை உயிர்கள் தாவரங்களைச் சாப்பிடத்தக்கவை. மற்ற வகை உயிர்கள் மாமிசம் தாவரம் இரண்டையுஞ் சாப்பிடத்தக்கவை. சிங்கம், புலி முதலிய மிருகங்கள் இறைச்சியை மாத்திரஞ் சாப்பிடத்தக்கவை. மாடு, ஆடு, குரங்கு, யானை முதலிய மிருகங்கள் புல்லு, இலை, தானியம், காய், பழம் முதலிய தாவர வர்க்கங்களை மாத்திரந் தின்னத்தக்கவை. நாய், பூனை முதலிய சில மிருகங்கள் மாமிசம் தாவரம் என்னும் இருவித போசனங்களையும் உண்ணத்தக்கவை.

சிங்கம், புலி முதலிய மிருகங்களுடைய பற்களையும் நகங்களையும் குடல்களையும் பார்த்தால், அவை மாமிசமே சாப்பிடுதற்குக் கடவுளாற் படைக்கப்பட்டன என்று அறியலாம். இந்த மிருகங்களுடைய நீண்ட கூரிய நகங்களும், வாள் போன்ற கூரிய பற்களும், மற்றவையினும் மிக நீண்ட வேட்டைப் பற்களும் மாமிசத்தைக் கிழித்துத் தின்பதற்கு ஏற்றவை. அன்றியும் இந்த மிருகங்களுடைய குடல்கள் குறுகியிருக்கின்றன. மாமிசம் விரைவாக அழுகி விஷமாகுந் தன்மையை உடையது. அது சரீரத்திலே அதிக நேரமிருந்தால் அதன் விஷம் பரவிவிடும். அது விரைவாக உடம்பிலிருந்து கழிந்து போகும்படியாகவே மாமிசந் தின்னும் மிருகங்களின் குடல்கள் சிறியனவாகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

தாவரங்களை உண்ணும் பசு முதலியவற்றின் பற்களோ தாவரத்தை மாத்திரஞ் சாப்பிடக்கூடியவைகளாக உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் பற்கள் சிங்கம், புலி முதலியவற்றின் பற்களிலிருந்து மிகவும் வித்தியாசமாக இருக்கின்றன. புலி சிங்கங்களுக்குள்ள கூரிய நகங்கள் இவைகளுக்கு இல்லை. தாவரங்களையே தின்னும் பசு முதலிய மிருகங்களின் குடல்கள் மிகவும் நீண்டிருக்கின்றன. தாவர போசனம் விரைவிற் பழுதுபடாது. அது நெடுநேரஞ் சரீரத்திலிருந்தால் அதன் சத்துப் பகுதிகள் சரீரத்தில் அதிகமாகச் சேரும். ஆதலால், அவைகளுடைய குடல்கள் நீளமாயிருக்கின்றன. மனிதனுடைய சரீரத்தின் அமைப்பு, தாவரங்களையே தின்னும் குரங்கின் சரீர அமைப்பை ஒத்திருக்கிறது. குரங்குக்குப் போல மனிதனுக்கும் வேட்டைப் பற்கள் மற்றைய பற்களினளவாய் இருக்கின்றன. தாவரந் தின்னும் மிருகங்களின் குடல் நீண்டிருக்கிறது போல மனிதனுடைய குடலும் நீண்டிருக்கின்றது. மாமிசம் வியாதியை உண்டாக்குகின்றது. மாமிசம் தீய குணங்களை உண்டாக்குகின்றது. மாமிச போசனம் கொலையாகிய பெரும் பாதகத்துக்குக் காரணமாகின்றது. மாமிச போசனம் தெய்வத் தன்மையாகிய இரக்கத்தைக் கெடுக்கின்றது. மாமிச போசனம் கடவுளுடைய விதிக்கு மாறானது.

சைவ போதம் இரண்டாம் புத்தகம்.

---

பிரதிகள் கிடைக்குமிடம் :

சண்முகநாதன் புத்தகசாலை
257, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்